
ISSN 1703-9185

# ஆத்மஜோதி

**Arthmajothy**

**January - March 2018**

ஏவிளம்பி வருட
தை - பங்குனி 2018
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



ஆத்மஜோதி நா. முத்தையா

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க





**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***

**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

**Homelife/Future Realty Inc.,Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**



# வாகன விபத்தா? அழையுங்கள்

# MR. P. SINGARAJ



**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**



NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!

வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.



**HONEST AND FRIENDLY SERVICE**
**CALL: MR. P. SINGARAJ**
**416-993-8443**
**905-471-3058**




கனடா மலர் 18:
இதழ் 4
ஏவிளம்பி வருடம்
தை - பங்குனி
திரு. ஆண்டு -2049
ஆங்கில ஆண்டு 2018



**கௌரவ ஆசிரியர்**
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி
**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்



**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651



**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
ARTHMAJOTHY ILLAM
1473 Birchmount Rd.
Toronto, ON. M1P 2G4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org


உ
சிவமயம்

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*


ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185


## உள்ளடக்கம்


| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 2 |
| பன்னிரு திருமுறைப்பாக்கள் | 4 |
| நாமார்க்கும் குடியல்லோம் | 7 |
| அப்பர் தேவாரத்தில் விநாயகர் | 14 |
| வேலுண்டு வினையில்லை | 22 |
| பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி - பாகம் 16 | 28 |
| இந்து சமயப் பேரவைச் செய்திகள் | 32 |
| வித்தகனார் விளையாடல் | 35 |
| சிவத்தமிழ் வித்தகரின் அமுதமொழிகள் | 40 |
| கோணேஸ்வரம் இரண்டாக வளர்ந்த தெய்வீக வரலாறு | 41 |
| ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை | 47 |



ஆத்மஜோதி தியான மணி மண்ட...
அறநெறிப் பாடசாலை

# ஆத்மஜோதி சுவாமிகளின் நூற்றாண்டு விழா

ஆத்மீகவள்ளல் அவர்கள் கருவினிலே திருவுடையவர். எமது தமிழ்ச் சமுதாயத்தை பக்தி உள்ளவர்களாகவும் ஒழுக்க முள்ளவர்களாகவும் வாழ வைக்கவேண்டும் என்பதற்காகவே பிறப்பெடுத்தவர். மலையக மக்களின் விடிவுக்காக 44 வருடங்கள் அரும்பணியாற்றியவர். மலையகமக்களின் இரட்சகராக திகழ்ந்தவர். நாவலப்பிட்டியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அறம் சார்ந்த ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதில் வெற்றியும் கணடவர்.

1948 ஆண்டு தொடக்கம் 1983 வரை 35 வருடங்கள் ஆத்மஜோதி என்னும் தமிழ்ச் சஞ்சிகையை இல்லற ஞானி திரு க. இராமச்சந்திராவுடன் சேர்ந்து ஆரம்பித்துத் தமிழ் கூறும் நல்உலகம் எல்லாம் பரப்பி வெற்றியும் கண்டவர். 1983இல் ஏற்பட்ட இனக் கலவரத்தில் ஆத்மஜோதி நிலையமும் அச்சகமும் தீககிரையான பின் யாழ்ப்பாணம் வந்து சாவகச்சேரியில் வாழ்ந்தார். அங்கே வாழும்பொழுது வடமாகாணம் முழுவதும் ஆலயந் தோறும் பாதயாத்திரை சென்று ஒரு ஆன்மீகப் புரட்சி செய்தார். இந்துனேசியாவில் இரண்டு வருடங்கள் வாழ்ந்து தமிழையும் இந்துசமயத்தையும் கற்பித்து விழிப்பூட்டினார். வீட்டுப்பிரார்த்தனை, கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவுகளை நடத்தி இந்துனேசிய மக்களின் மனதில் நீங்காத இடம்பிடித்தார். பல நூற்றுக் கணக்கான வீடுகளில் அவருடைய திரு உருவப்படத்தினை வைத்து வணங்கும் அளவிற்கு இந்துனேசிய மக்களால் நேசிக்கப்பட்டார்.

1994 ஆம் ஆண்டு கனடாவிற்கு சைவசித்தாந்த மகாநாட்டிற்கு வந்த பொழுது தன் அன்பர்களைச் சேர்த்து இந்துசமயப் பேரவையை ஆரம்பித்தார். அவர் ஒரு ஞானசுரபி. அரை நூற்றாண்டுக்கு மேலாக ஞானிகளையும் மகான்களையும்

ஏழையின் பக்தியில் இறைவன் மகிழ்கிறான்.

சித்தர்களையும் தேடித்திரிந்து தரிசனம் செய்ததால் அவரும் ஒரு ஞானிஆனார். அவரால் தொடங்கப்பட்ட கனடா இந்து சமயப் பேரவை பல சாதனைகளை செய்து வருகின்றது. அவரின் நூற்றாண்டு ஜெயந்தி விழாவை இருநாட்கள் யூலை 21 22ஆம் திகதிகளில் மாலை 3 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை கனடா கந்தசுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடத்த உள்ளது. ஆத்மஜோதி சுவாமிகளை ஞானகுரு வாகப் போற்றும் பூரண சற்குரு சுவாமிகள் சுவிஸ்சில் இருந்து முதன்மை விருந்தினராக இருநாள் விழாவிற்கும் வருகை தருகிறார். சைவத்தமிழ் மக்களை அன்புடன் அழைக்கின்றோம்

**தமிழ் மொழி வளர்ந்தால் சைவம் வாழும்.**
**சைவம் வாழ்ந்தால் தமிழ் மொழிவளரும்.**

உதவி ஆசிரியர்
சிவ முத்துலிங்கம்

---

**கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்**
**சர்வதேச தர்ம பரிபாலன அறக்கட்டளைக்கு வாரி வழங்குங்கள்**

**ஆதீன விலாசம்:**



கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன அறக்கட்டளை, மேட்டுக்குப்பம் 807802 நெய்வேலி வழி கடலூர் மாவட்டம்
ஆதீனத் தொலைபேசி இலக்கம்: 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245

அனாதரவான சிறார்களையும், ஆதரவற்ற முதியோர்களையும் பராபரிக்கும் தர்ம ஸ்தாபனமான நிறுவனத்திற்கு நன்கொடை அளித்து உதவி செய்யுங்கள்.

நடக்கமுடியாத நிலையில் படுக்கையில் படுத்தபடி நிறுவனத்தைப் பரிபாலிக்கும் மகா ஞானியான கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளின் தன்னிகரில்லா தன்நலம் அற்ற சேவைக்கு நிதி உதவி செய்து சுவாமிகளின் சுமையை குறைத்து அருளாசிகளைக் பெறுவீர்களாக!

---

தூயமனதுக்கு இறைவன் புலப்படுகின்றான்.

# பன்னிரு
# திருமுறைப்பாக்கள்

முதலாம் திருமுறை பதிகம் 25 பாடல் 1

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே.

இரண்டாம் திருமுறை பதிகம் 08 பாடல் 1

வானு லாவுமதி வந்துல வும்மதில் மாளிகை
தேனு லாவுமலர்ச் சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல் வேளைவிழித் திட்டவெண் ணெய்ப்பெரு மானடி
ஞான மாகநினை வார்வினை யாயின நையுமே.

மூன்றாம் திருமுறை பதிகம் 51 பாடல் 1

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்சல் என்றருள் செய்யெனைப்
பொய்ய ராஅம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே.

நான்காம் திருமுறை பதிகம் 2 பாடல் 1

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கள் சூளா
மணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண அரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

ஐந்தாம் திருமுறை பதிகம் 2 பாடல் 1

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந்து உய்வனோ.

ஆறாம் திருமுறை பதிகம் 11 பாடல் 1

பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னைப்
பேணாதார் அவர்தம்மைப் பேணா தானைத்
துறவாதே கட்டறுத்த சோதி யானைத்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்றான் தன்னைத்
திறமாய எத்திசையுந் தானே யாகித்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நிறமா மொளியானை நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே.

ஏழாம் திருமுறை பதிகம் 4 பாடல் 1

தலைக்குத்தலை மாலை அணிந்ததென்னே
சடைமேற்கங்கை வெள்ளம் தரித்ததென்னே
அலைக்கும்புலித் தோல்கொண்டு அசைத்ததென்னே
அதன்மேற்கத நாகங்கச் சார்த்ததென்னே
மலைக்குந்நிக ரொப்பன வன்திரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அலைக்குங்கட லங்கரைமேல் மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே

எட்டாம் திருமுறை பதிகம் 24 பாடல் 1

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந்
தமைந்த
பழுத்தமனத் தடியர்உடன் போயினர்யான்
பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி
ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்உன்
அடைக்கலமே.

ஒன்பதாம் திருமுறை பதிகம் 03 பாடல் 1

உறவா கியயோ கமும்போ கமுமாய்
உயிராளி! என்னும்என் பொன்ஒருநாள்
சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற

மறவா! என்னும் மணி நீஅருவி
　　மகேந்திர மாமலை மேல்உறையும்
குறவா! என்னும்; குணக் குன்றே; என்னும்;
　　குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
　　வஞ்சகர் போய் அகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
　　புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடி
　　யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
　　பல்லாண்டு கூறுதுமே.

பத்தாம் திருமுறை　　　　பாடல் 14

ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉல கோடுயிர் தானே.

பதினொராம் திருமுறை　　　　பாடல் 1

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும்
　　போதஞ்சி நெஞ்சம் என்பாய்த்
தளர்ந்திங்கு இருத்தல் தவிர்த்திகண்
　　டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்
　　திடைவளர் கோட்டுவெள்ளை
இளந்திங் களும்எருக் கும்இருக்
　　குஞ்சென்னி ஈசனுக்கே.

பன்னிரெண்டாம் திருமுறை　　　　பாடல் 1

அகில காரணர் தாள் பணிவார்கள் தாம்
அகில லோகமும் ஆளற்கு உரியர் என்று
அகில லோகத்து உளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வத தனிடை.

# “நாமார்க்கும் குடியல்லோம்”

ஆத்மஜோதி நா. முத்தையா

“நாமார்க்கும் குடியல்லோம்” என்று கூறியவர் 1400 ஆண்டு களுக்கு முன் வாழ்ந்த அப்பர் சுவாமிகள். அப்பர் சுவாமிகள் சிவ நெறியில் நின்றவர். பட்டத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு சமணநெறியில் புகுந்தார். புகுந்தவரை இறைவன் சூலையைக் கொடுத்து ஆட்கொண்டான். சமணக்குருமாரின் சூழ்ச்சியால் நாவுக்கரசரை அழைக்க மந்திரிமார் சென்றிருந்தனர். சிவபெரு மானுடைய அருள்பெற்று உய்ந்த நாவுக்கரசருக்கு சிவபெருமானைத் தவிர வேறு யாரும் தலைவராக இருக்க முடியாது. ஆதலினால் நாமார்க்கும் குடியல்லோம் என்றார்.

நான் அரசன் என்ற ஆணவத்தடிப்புள்ள அரசனால் நாவுக்கரசரது நிலையைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆணவமற்ற ஒருவரை ஆணவமற்ற ஒருவரால்தான் புரிந்துகொள்ளமுடியும்.

கோடீஸ்வரனாக இருந்த பட்டினத்தடிகள் திடீரெனக் கோவணாண்டியானார். ‘உடை கோவணம் உண்டு, உறங்கப் புறத்திண்ணையுண்டு’ என்ற நிலைக்கு அவரது மனம் ஆசைகளிலிருந்து விடுபட்டுவிட்டது.

ஒவ்வொரு மனிதனுக்கும் உணவு, உடை, இருப்பிடம்ஆகிய இந்த மூன்றுமேதான் அவசியம். இந்த மூன்றையும் உலகிலுள்ள எல்லா மனித இனங்களுமே பெற்றுக்கொள்ளுகின்றன. அரசன் முதல் ஆண்டி வரை எல்லாருக்குமே இத்தேவை உண்டு. மனிதனைத் தவிர்ந்த மற்றைய உயிரினங்களுக்கு உணவும் வதிவிடமும் மாத்திரம் தேவை உண்டு. இன்னும் சில பிராணிகள் பசிதோன்றும்போதுதான் உணவுக்காக அலைந்து திரியும். வதிவிடத்தைப்பற்றி அவை கவலைப்படுவதில்லை.

பகுத்தறிவுள்ள மனித இனம் ஒன்றுதான் தன் வாழ்நாள் முழுவதையும் இந்த மூன்றுக்குமாகச் செலவு செய்கின்றது.

ஆசைக்குத் தக்கதாக வதிவிடம் மாளிகை கூட கோபுரமாக மாறுகிறது. உடை குறுகியும் நீண்டும் மற்றேயோரைக் கவரும்வகையிலும் அமைந்துவிடுகிறது. இதற்காகவும் மனிதன் வாழ்நாள் முழுவதும் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்கின்றான். உணவிலும் இயற்கையோடியைந்த உணவை விட்டு நாவுக்கு அடிமைப்பட்டுவிடுகின்றான்.நாவைத் திருப்திப்படுத்த வாழ்நாள் முழுவதும் அலைகின்றான்.

மனிதன் ஒரு தாவரபட்சிணி. இதனை உலகம் முழுவதும் ஒப்புக்கொண்டுள்ளது. மனிதன் ஒருவனுக்குத்தான் இறைவன் இரு சக்திகளைக் கொடுத்திருக்கிறார். ஒன்று சிரிக்கிற சக்தி, அடுத்தது பகுத்தறிவு. பகுத்தறிவு கல்வியினால் விருத்தியடைய வேண்டும். அதன் பயன் கடவுள் நினைவாகும்.இவை எல்லாம் ஏட்டளவில்தான்.

மனிதன் கற்ற கல்விக்கும் அவனுடைய வாழ்க்கைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கல்வி, பட்டம், பெறுவதோடு சரி, அப்பால் மனிதன் பணத்திற்கும் பதவிக்கும் அடிமையாகிவிடுகின்றான். பணம் ஈட்டுவதிலும் பதவியில் உயர்வதிலும் கிடைத்த பதவியைக் காப்பதிலும் எத்தகைய பாவச்செயல்களைச் செய்வதற்கும் அவன் பின்வாங்குவதில்லை.

'ஆசைப்படபட ஆய்வருந்துன்பங்கள் ஆசை விடவிட ஆனந்தமாமே'

மனிதன் உள்ளதோடு திருப்திப்படாமல் ஆசைக்கு எண்ணெய் ஊற்றிப் பேராசையை வளர்க்கிறான். அது லோபம், மோகம், கோபம், குரோதம், மதம், மார்ச்சரியம் என்ற தனது சினேகிதர்களையும் அழைத்துக்கொண்டு வந்து எமது உத்தரவில்லாமலே குடியேறிவிடுகின்றது. இவைகளோடு ஐம்புலன்களும் சேர்ந்துகொள்கின்றன. மனிதனுடைய ஆணவம் இத்தனை வழியாகவும் எட்டிப்பார்க்கின்றது. மனிதன் ஆணவத்திற்கு அடிமையாகிவிடுகின்றான்.

---

எல்லாம் துறந்த பட்டினத்தடிகள் கோவண உடையுடன் குப்பை மேட்டில் இருந்தார். இக்காட்சியைக் கண்ணுற்ற பத்திரகிரியார் என்ற அரசன் அதனால் என்ன பயன் கண்டீர்கள் எனக் கேட்டான். 'நீ நிற்க நான் இருக்க' என்று அமைதியாகப் பதிலளித்தார் பட்டினத்தடிகள். 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பது இந்த இடத்திலேதான் ஆழ்ந்தபொருளைத் தருகிறது. பட்டினத்தாருக்குத் தேவையொன்றும் இருக்கவில்லை. தேவையைப்பொறுத்தே மரியாதையும் இந்த உலகில் இருப்பதைப் பார்க்கின்றோம்.

எல்லா ஆசைகளையும் விட்டு சிவபெருமானிடமே தம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்த அப்பர் சுவாமிகளுக்கு அரசனுடைய தேவை இருக்கவில்லை. எங்கள் எல்லாருக்கும் ஓரே ஒரு தலைவன் தான் இருக்கிறார். அவர்தான் சிவபெருமான். அவரைத்தவிர மற்றொருவரையும் யான் தலைவராகக் கொள்வதில்லை. ஆதலால் ' நாம் யார்க்கும் குடியல்லோம்' இறைவனை முன்வைத்து வாழ்கின்ற வாழ்க்கை ஒன்றே உண்மையான வாழ்க்கை.

மற்றவையெல்லாம் பொய்யான வாழ்க்கையாகும். இன்ப வாழ்வுக்கு இலக்கணம் கூற வந்த சுந்தரர் 'இறைகளோடு இசைந்த இன்பம் இன்பத்தோடு இசைந்த வாழ்வு' என்று கூறினார். ஆகையால் மற்றைய வாழ்க்கை எல்லாம் பொய்யான வாழ்க்கை என்பதை உணர்ந்த அப்பர் சுவாமிகள் 'நடலை இல்லோம் என்றார்'. நடலை என்பது இறைவனை மறந்து வாழும் பொய்யான வாழ்க்கையாகும்.

பருமரத்தை அண்டிய பல்லி பகைவருக்கு அஞ்சுவதில்லை. அதுபோல முழுமுதற்பொருளாம் சிவபெருமானை அண்டி இருப்பவர்கள் தமக்கு கிடைத்த துணையை நினைந்து இறுமாந்திருப்பார்களாம். அவர்களுக்கு மனக்கவலையோ உடற்பிணியோ உண்டாவதில்லை. வினையின் பிரகாரம் அதனையும் அனுபவிக்க வேண்டி நேரிட்டால், அதனையும்

---

மணிக்கணக்கில் செய்யும் போதனையைவிட ஒரு கணம் செய்யும் உதவி மேலானது.

இறைவனுக்கே அர்ப்பணமாக்கிவிடுவர். அதனால் மனக்கவலையும் உடற்பிணியும் அவர்களைத் தீண்டுவதில்லை. அதனால் "ஏமாப்போம் பிணியறியோம் ' என்றார். தேவை ஏற்படும்போது தான் அத்தேவையை பூர்த்திசெய்ய மற்றவர்களுடைய தயவு வேண்டும். அத்தயவைப் பெறுவதற்கு மற்றவர்களுக்குப் பணிந்துபோக வேண்டும். ஒரு சிறிய விஷயத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஆயிரம் நமஸ்காரம் செய்யவேண்டியுள்ளது. ஆதலினால் "பணிவோம் அல்லோம்" என்றார்.

உலகத்தில் பெரிய பயம் மரண பயம். அப்பயத்தினின்று விடுபடவேண்டுமென்றே உலகத்திலுள்ள மகான்கள் எல்லாரும் வாழ்நாள் எல்லாம் பாடுபட்டிருக்கின்றனர்.

"உயிர் மங்கும்பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்"
"ஐவரும் கைவிட்டு மெய்விடும்போது அடியேன் உன் அடைக்கலமே"
"கார்மாமிசை காலன் வரிற் கலபத்தேர்மாமிசை வந்து எதிர்ப்படுமாம்"

என்றெல்லாம் அருணகிரியார் வேண்டுதல் செய்திருக்கின்றார். "நோயுற்றரடராமல் நொந்து மனம் வாடாமல் பாயிற்கிடவாமல் பாவியேன் காயத்தை – ஓர் நொடிக்குள் நீக்கி ஒண்போரூரா உன்றன் சீர் அடிக்குள் வைப்பாய் சிறந்து" என்பது பாம்பன் சுவாமிகளினுடைய வாக்கு.

"சிவ சிவ என்றொரு நாமம் சொல்லடா
கெட்டபாவமே அது உனக்குப் பாரம் என்னடா
பொல்லாத யமன் வந்தால் விடமாட்டான்
சாம்பசிவ பக்தன் என்றால் தொடமாட்டான்" என்பது நந்தனார் தன் சகாக்களுக்கு கூறியதாக கோபால கிருஷ்ண பாரதியார் பாடியுள்ளார்.

சிவ பக்தர்களுக்கு யம பயமும் யம வேதனையும் இல்லை.

---

அகந்தையை துறந்தால் அருளைப் பெறலாம்.

அவர்களுக்கு நரக வேதனையும் இல்லை. அதனால் "நமனையஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம்" என்று பாடியுள்ளார் அப்பர் சுவாமிகள்.

சிவபக்தன் சிவமே ஆகிவிட்டால் இன்பமன்றித் துன்பத்திற்கு இடமே இல்லை.அன்பும் சிவமும் ஒன்றே அன்பு உள்ள இடத்தில் துன்பத்திற்கு இடம் ஏது? அறிவில்லாதவர்கள் தான் அன்பையும் சிவத்தையும் பிரித்துப் பேசுவர். அன்பே சிவம், சிவமே அன்பு, இதனை உணர்ந்த அப்பர் சுவாமிகள் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்றார்"

சங்கரன் என்ற சொல்லுக்குப் சுகத்தைச் செய்பவன் என்று பொருள். நினைப்பவர் மனத்தைக் கோயிலாகக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய சுகத்தைக் கொடுக்கிறான். அடியார்க்கு எளியன் சிற்றம்பலவனாயிருந்தாலும் அவன் யாருக்கும் ஆட்பட்டவன் அல்ல. ஆதிபரம்பொருட்கு வேற்றுமை இல்லை. அவன் அடியார்களுக்கும் அது இல்லை. ஆகவே இறைவன் நாம் ஆர்க்கும் குடியல்லாத்தன்மையன், சங்கரன் இந்த நிலை அவனடியார்க்கும் பொருந்துவதாகும். ஆனபடியினால் அப்பர் சுவாமிகள் "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற இறுமாப்போடு கூறினார். அப்பரின் இந்த நிலை அவரை அழைத்துச்செல்ல வந்த மந்திரிகளிடமும் இல்லை; அரசனிடமும் இல்லை. அப்பரை அவர்கள் புரிந்துகொள்வது கஷ்டமே.

அப்பரின் வாக்கு ஆணவமற்ற இடத்தில் எழுந்தவாக்காகும். இறைவனிடம் தம்மை முழுதாக ஒப்புக்கொடுத்த நிலையில் அதாவது பூரண சரணாகதியில் எடுத்தவாக்காகும். அரசனிடமிருந்து வந்த கட்டளையோ நான் அரசன் என்ற அகந்தையிலிருந்தும் அறியாமை என்ற இருளிலிருந்தும் எழுந்த கட்டளையாகும். அக்கட்டளையைச் சுமந்துசென்ற மந்திரிமாருக்கும் அப்பருடைய நிலையைப் புரிந்துகொள்ளமுடியவில்லை.

நாம் இறைவனுக்கே மீளா அடிமையான பின் இரண்டாவது

---

தனித்திருந்து ஆன்மீக சாதனை செய்ய வேண்டும்.

ஒரு பேர்வழிக்கு அடிமையாவது எங்ஙனம். சிவபெருமானைத் தவிர சிவனடியார்களுக்கு வேறொரு தலைவர் இல்லையே. சிவத்தை அடையாதவர்களுக்கு பல தலைவர்கள் இருக்கலாம். சமண மன்னன் அப்படித்தான் நினைத்தான். அரசனை அடைந்துவிட்ட ஒருவனுக்கு வாயில்காப்போர் ஒவ்வொருவருக்கும் சலாம் போடவேண்டிய அவசியம் இல்லையல்லவா?

ஒரு கிராமப்புறத்தானுக்கு அரண்மனையில் வேலை செய்பவன் ஒருவன் சினேகிதன். கிராமப்புறத்தானுக்கு அரசனை ஒருமுறையாவது தரிசனம் செய்துவிடவேண்டும் என்ற ஆசை. இந்த ஆசையை நிறைவேற்றி வைக்குமாறு நண்பனிடம் வேண்டினான். நண்பனும் சம்மதித்தான். இருவரும் அரசனைக்காணப் புறப்பட்டனர். ஏழு வாசல்களைக் கடந்தே அரசனுடைய தரிசனம் கிடைக்கவேண்டியிருந்தது. முதலாவது வாசலில் நின்ற காவல்க்காரனுடைய மிடுக்கான தோற்றத்தைக் கண்டதுமே கிராமப்புறத்தான் இவன்தான் அரசனென்று அவன் காலில் விழப்போனான். நண்பன் தடுத்து இவன் காவற்காரன் என உணர்த்தினான். உள்ளே செல்லச் செல்ல ஒவ்வொரு வாசலிலும் நின்ற காவல்க்காரர்கள் மிடுக்கான தோற்றமுடைய வர்களாகக் காணப்பட்டனர். ஏழு வாசல்களையும் கட க்கும்வரை இவர்தான் அரசரா? என்று கேட்டுக்கொண்டே வந்த கிராமப்புறத் தான் உண்மையான அரசரைக் கண்டதும் இவர்தானா அரசர் என்று கேட்கவில்லை. தானாகவே சென்று வணக்கம் செலுத்தினான்.

இதே போன்று இறைவனுடைய காட்சி கிடைக்கும் வரை இடையிலே பல தலைவர்கள் இருப்பதுபோலத் தோன்றலாம். ஆனால் இறை தரிசனம் கிடைத்த பின்பு ஒரே ஒரு தலைவனைத் தவிர வேறு யாரும் தலைவராக இருக்கமுடியாது. ஆகவே தான் அப்பர் சுவாமிகள் " நாமார்க்கும் குடியல்லோம்" என்றார்.

மனிதன் மண்ணுக்கும், பெண்ணுக்கும், பொன்னுக்கும் அடிமையாகி இறைவனுடைய தலைமையை மறந்துவிடுகின்றான்.

---

சகிப்புத் தன்மையை விட இலாபமான செல்வம் கிடையாது.

சிவநினைவின்றி எண்ணாயிரம் ஆண்டுகள் யோகத்தில் இருந்தாலும் சிவபெருமானைக்காண இயலாது. அதைவிட்டு அகத்தே நாடி அருள்ஒளி பெற்றுநோக்கினால் அவ்வொளியில் சிவபெருமான் பிரத்தியட்சமாவதைக் காணமுடியும். இந்த நிலையில்தான் அப்பர் சுவாமிகள் தேடிக் கண்டுகொண்டேன் – திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொனாத்தேவனை என்னுள்ளே – தேடிக்கண்டுகொண்டேன் என்று பாடினார். உள்ளத்தினுள்ளே சிவத்தை உணர்ந்துகொண்ட அப்பரடிகள் "நாமார்க்கும் குடியல்லோம்" என்றார்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லொம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

நாமார்க்கும் குடியல்லாத்தன்மையான சங்கரன் நற்சங்கவெண் குழையோர் காதிற்கோமாற்கே நாமென்றும் மீளாஆளாய்க் கொய்ம்மலர்சேவடியினையே குறுகினோமே! இப்பதிகம் பாடிய அப்பர் சுவாமிகள் பதிகத்தின் கடைசிப் பாடலில்

"தேவாதிதேவன் சிவனென் சிந்தைசேர்ந்திருந்தான்
தேன்திசைக்கோன் தானே வந்து
கோவாடிக்குற்றேவல் செய்கென்றாலும்
குணமாகக் கொள்ளோம்"

என்று கூறுகின்றார். அப்பரின் அஞ்சாமை நமக்கும் வரவேண்டுமானால் சிவனை நம்முள்ளே உணர்வோமாக.

---

தலைவனாக இருக்க விரும்புபவனுக்கு ஊழியனாகவும் இருக்கத் தெரிய வேண்டும்.

ஒருவனுக்கு அறிவு இருந்தும் ஆற்றல் இல்லாவிடில் அவன் வாழ்வு சிறக்காது.

உலக ஆசை நீங்க நீங்க இறைபக்தி அதிகரிக்கும்.

# அப்பர் தேவாரத்தில் விநாயகர்

புலவர் திரு. இரா. செல்வகணபதி

**கல்லார்கட் பட்ட திரு:**

செறிந்து வளர்ந்து நின்றது அந்தக்காடு. கதிரவனின் ஒளிவெள்ளம் அதன் ஊடே புகமுயன்று தளர்ச்சியுற்றது. அமைதிகொண்ட அக்காட்டிடையே கடுந்தவம் இயற்றி நிற்கின்றாள் ஓர் இளம்பெண். அவள் ஓர் அரக்கர் குலக்கொழுந்து வசிட்டர் மரபில் வந்தவர் மாகத முனிவர். அவர்பால் அருள் பெற விரும்புகிறாள் விபுதை என்ற பெயர் கொண்ட அந்நங்கை. தவமேற்கொண்ட முனிவர் ஒருநாள் கண்விழிக்கிறார். அவர் பார்வையில் காதல் மடப்பிடியொன்று களிற்றொடு மருவிநிற்கும் காட்சிபடுகிறது. முனிவர் காமக் குறிப்பில் ஆழ்கிறார். அவர் குறிப்புணர்கிறாள் விபுதை. முனிவர் அருகில் நெருங்குகிறாள். காமவயப்பட்ட முனிவர் விபுதையைப் பெண் யானையாக்கித் தானோர் ஆண்யானை வடிவாகி அவளோடு கூடிக் கலக்கிறார். இக்கூட்டக் கலப்பில் யானை முகத்துடன் கயாசுரன் தோன்றிச் சிவபெருமானைநோக்கிக் கடுந்தவம் இயற்றுகிறான். பெருமான் அருளால் பெருவரம் பெற்று மதங்கபுரத்தில் அரசாள்கிறான் கயாசுரன். 'கல்லார் கட் பட்ட திரு' வென்ன அவன் தவங்கள் தேவர்களை வருத்தப் பயன்படுகிறது.

**கணபதி தோற்றம்:**

தேவர்கள் சிவபெருமானைப் பரவுகின்றனர். பெருமான், உமையைப் 'பிடியதன் உரு' கொளச் செய்கிறார். 'கரியது வடிவு' தான் கொள்கிறார். இக்கூட்டக் கலப்பில் 'வழிபடும் அவர் இடர்கடி கணபதி' தோன்றுகின்றார். தோன்றி தன் கொம்பினை ஏவி

---

அறிவை விட அதிக பயனுள்ள புதையல் கிடையாது.

கயாசுரனை அழிக்கிறார். தேவர்கள் மகிழ்கின்றனர். கயாசுரன் பெருச்சாளி வாகனமாய் விநாயகரைத் தாங்குகின்றான்.

இது கந்தபுராணம் விரிக்கும் கதை. இந்த விரிந்த கதைக்கு அடியிட்டவர் அப்பர் பெருமான். விநாயகக் கடவுள் தோற்றத்திற்கு அவர் கூறும் காரணம் இப்படி அமைகிறது. அடியார்களும் மறைவல்லாரும் எதிர்கொள்ளத் திருவீழிமிழலை எய்திய ஆளுடைய அரசர் திருவீழிமிழலையானைப் பணிந்து பணிந்து பாடுகிறார். 'போலும் போலும்' என முடிவடையும் தொடர்களால் இறைவன் இயல்பை எடுத்தோதி வியக்கும் அரசர் விநாயகன் தோற்றத்தை விளக்க வரைகிறார்.

"கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை அவனாற்கொல் வித்தார் போலும"

என்றெடுத்து தேவர் குலம் வாழ அரக்கர் திறம் மாள வந்த விநாயகர் தோற்றத்தை விளைத்த பெருமானை வியந்துசிறக்கிறார்.

முதற்குறிப்பு:

விநாயகர் வழிபாடு தமிழர்க்குத் தொன்மையானது. தமிழ் மண்ணில் அவ்வழிபாடு வந்த வகை பற்றிய கருத்து வேற்றுமைகள் எத்தனையோ உண்டு. சங்க இலக்கியம் எனப் பேசப் பெறும் தொகையும் பாட்டும் விநாயகர் வழிபாட்டை விளக்கவில்லை. முருகனும்-உருத்திரனும் பலராமனும்-திருமாலும் அங்கே திகழ்ந்து நிற்கிறார்கள். விநாயகர் விளங்கித் தோன்றவில்லை. சங்க இலக்கியத்திற்குப் பிற்பட்ட கீழ்க்கணக்கு நூல்களுள் தொன்மையானவற்றுள்ளுஞ்சரி சில காப்பியங்களுள்ளும் சரி விநாயகரைக் காணோம். கல்லாடத்தில் விநாயகர் குறிப்பு உண்டு. தற்கால ஆய்வால் கல்லாடம் தேவாரத்திற்குக் காலத்தால் பிற்பட்டது என நிறுவப்பட்டது. இக்கருத்து உண்மையானால்

விநாயகரைப் பற்றிய முதற் குறிப்புகளைத் தருவன மூவர் தேவாரங்களே என்பது வலிமைபெறும்.

மூவர் நெறி:

மூவர் தேவாரத்துள்ளும் விநாயகர் பற்றிய குறியீடுகள் மிகச்சிலவே. திருஞானசம்பந்தப்பிள்ளையார் இரண்டிடங்களிலும் சுந்தரமூர்த்திகள் ஓர் இடத்திலும் விநாயகரைப்பற்றிக் குறித்தருளினர். சம்பந்தர் தேவாரம் விநாயகர் வந்த வரலாறு கூறி அவர் தோற்றம் விளக்குகிறது. சுந்தரர் தேவாரமும் இவரைப் பேசுகிறது. அப்பரடிகள் மட்டுமே விநாயகர் பற்றிய பல குறிப்புக்களை ஆங்காங்கே விளக்கிச்செல்கிறார். ஐந்து திருப்பாடல்களுள் அவர் ஐங்கரனின் திறம் பேசுகிறார். அவற்றுள்ளும் நான்கு திருப்பாடல்கள் தாண்டகத்துள் அமைகின்றன.

கண்ணுதற் பெருமானையன்றிச் சிறு தெய்வம் எவற்றையும் பாடுதல் செய்யா மதுகையுடையவர்கள் தேவார மூவர். அப்பர் அடிகள் தேவாரத்துள் விநாயகர் பற்றிய குறிப்புகள் யாவும் சிவபெருமானின் பேரருளை வியக்கும் முகத்தான் அமைந்தனவேயன்றி விநாயகருக்குரிய தோத்திரங்கள் எவையுமில்லை. பிற தெய்வங்கள் பற்றிய குறிப்புகளும் இந்த அடிப்படையில் மட்டுமே அமையக் காண்கிறோம். உமையம்மையார்க்குக்கூடத் தனியே வாழ்த்துரைக்காத வன்மையினைத் தேவார மூவரிடம் காண முடிகிறது.

அடிகள் காட்டும் ஐங்கரன்:

ஐந்துகரத்தினனாய அப்பெருமானுக்கு அப்பரடிகள் வழங்கும் பெயர்கள் பல. கணபதி, விநாயகன், விக்கினவிநாயகன், கைவேழமுகத்தவன், தண்கடமாமுகத்தினன் என ஐந்து திரு நாமங்களைக் குறிப்பித்தருளுகிறார். இவற்றுள் 'கணபதி' திருநாமம்

மட்டும் ஏனைய இரு தேவார ஆசிரியர்களாலும் அங்ஙனமே எடுத்தாளப்பெறக் காண்கிறோம். அப்பரடிகள் இங்ஙனம் பல திருநாமங்களைச் சூட்டுவதோடு மட்டும் அமையாது விநாயகரது தோற்றம் அருள்த்தன்மை போன்ற சில குறிப்புக்களையும் இணைத்துப் பேசிச் சொல்கிறார்.

**கணபதி என்னும் களிறு:**

அமணர்கள் வஞ்சனையுணரமாட்டாத பல்லவ வேந்தன் சைவம் மீண்ட அப்பர் பெருமானுக்கு இழைத்த தீமைகள் எண்ணில. பல்லவன் ஏவலில் தன்னை இடற ஏவப்பெற்ற பட்டத்துயானைக்கு அஞ்சாத திண்மையராய் அப்பரடிகள் அருளிய பதிகம் 'சுண்ணவெண் சந்தனச்சாந்தும்' என்று தொடங்கும் அற்புதப் பதிகமாகும். இப்பதிகத்தேதான் விநாயகரைப்பற்றிய முதற் குறிப்பினை அப்பரடிகள் அருள்கிறார். கடகளிற்றினையும் கண்டஞ்சாத உள்ள உறுதிக் காரணங்களைக் காட்டி வரும் அடிகள் விநாயகனின் விளக்கத்தைக் குறிக்கிறார். கணபதி என்னும் களிற்றையும் இருசுடரையும் கயிலாய மலையையும் கெடிலத்தையும் உடைய வீராட்டானத்துப் பெருமானின் தமர்யாம் என்ற பெருமித உணர்வைப் பேசி சிறக்கிறார். கணபதி என்னும் களிற்றையுடைய பெருமான் என சிவபெருமானைக் குறிப்பித்தருளுதலாலே அப்பரடிகள் ஓர் சிறப்பினை உணர்த்த விரும்பியிருத்தல் திண்ணமாகிறது. கணபதி என்னும் களிறு என்று மட்டும் குறியாது.

> "பலபல காமத்த ராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
> கலமலக் கிட்டுத் திரியும் கணபதியென்னும் களிறு"

என அக்களிற்றின் இயல்பினையும் உடன் விளக்கிப் பேசுகிறார். இக்கருத்தினையே 'தனதடி வழிபாடு மவரிடர் கடி கணபதி' என ஞானப்பிள்ளையார் குறிப்பிக்கக் காண்கிறோம். வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றை எல்லாம் ஒன்றோடு ஒன்று கலந்து பெற்ற

---

எல்லாவிதமான செல்வங்களுக்கும் அறிவு தான் வேர்.

முறையன்றிப் பிறழ்ந்து பயன் தரும் பேரருளாளனாக விநாயகரை குறித்தருளும் சிறப்பு அப்பரடிகளின் அப்போதைய மனநிலையை மதிப்பிட உதவுதலைக் காண்கிறோம். தடைகளைத் தகர்த்து அருள் பாலிக்கும் விநாயகரையும் உடைய திருவதிகைவீரட்டத்து இறைவனின் தமர்யாம் என்ற குறிப்பில் விநாயகனது அருளிப்பாட்டையும் சிவபெருமானை வணங்குதல் ஒன்றாலேயே பெறுதல் கூடுமென எண்ணும் அப்பரடிகளின் கருத்து விளங்கித்தோன்றக் காண்கிறோம். அத்தொடரால் கணபதி என அவ்விறைவன் திருநாமமும் களிறு என வடிவமும் குறிப்பிக்கப்பெறும் சிறப்பையும் அறியமுடிகிறது.

**வரலாற்றுப்போக்கில்:**

இங்கே குறிப்பிடபெற்ற விநாயகர் பற்றிய குறிப்பைப் பற்றி வேறொன்றையும் எண்ணிப்பார்த்தல் வேண்டத்தக்கதாகும் அப்பரடிகள் சமணம் விட்டு சைவத்துக்கு மாறியவுடன் பல்லவ மன்னன் இழைத்த தீமைகள் பலவற்றுள் யானையை ஏவியதும் ஒன்று. அக்காலை எழுந்த திருப்பதிகமே 'சுண்ணவெண் சந்தனச்சாந்தும்' என்ற திருப்பதிகம் என்பது பெரிய புராணத்தால் நன்கு விளக்கமுறுதல் கண்கூடு. எனவே, அப்பரடிகள் சைவம் சார்ந்த ஆரம்ப காலத்தில் அருளப் பெற்றது இத்திருப்பதிகம் என்பது உறுதியாகிறது. இத்திருப்பதிகத்துள் விநாயகர் பற்றிய குறிப்பிருத்தலை மேலே கண்டோம்.

பெரியபுராணத் துணைகொண்டும் பிறச்சான்றுகளாலும் நுண்ணிதின் ஆராய்ந்த தற்கால வரலாற்றாசிரியர்கள் பலரும் அப்பரடிகள் சமணம் விட்டு சைவம் சார்ந்தது கி.பி 630 க்கு ஒன்றிரண்டாண்டு முன் பின்னாதல் வேண்டுமென வரையறுக்கின்றனர் எனின், திருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்த காலமோ கி.பி 638 ஆம் ஆண்டை ஒட்டியதாதல் வரலாற்றாராய்ச்சியால் உறுதிப்படுகிறது. இவ்விரு முடிவும் உறுதி செய்யப்படுமானால் திருஞானசம்பந்தரின் 'பிடியதன் உரு' என்று

செல்வங்களை விட செல்வாக்கு மேலானது.

தொடங்கும் விநாயகர் பற்றிய குறிப்பினைத்தரும் தேவாரம் எழுந்ததற்கு ஏறத்தாழ பதினைந்தாண்டுகட்கு முன்னரே அப்பரடிகளின் 'சுண்ணவெண் சந்தனச்சாந்தும்' என்று தொடங்கும் விநாயகர் பற்றிய குறிப்புடைய பதிகம் எழுந்ததால் உறுதிப்படும். எனவே விநாயகரைப்பற்றிய முதற்குறிப்பினைக் குறிப்பித்தருளிய பெருமை அப்பரடிகட்கே உரியதாதல் பெறப்படும். தொகுப்பு முறையால் இத்திருப்பதிகம் நான்காம் திருமுறையதாயினும் கால ஆய்வால் தமிழிலக்கியத்தினுள்ளேயே விநாயகர் பற்றிய முதற்குறிப்பினைத் தருவதான பெருமையைப் பெறுகிறது. நாலாந்திருமுறையுள் இத்திருப்பாட்டு ஒன்றே விநாயகர் குறிப்புடையது.

ஒரு சிற்றாராய்ச்சி:

ஐந்தாம் திருமுறையில் விநாயகர் பற்றிய குறிப்புக்கள் ஏதுமில்லை. எனினும் சிலர் திருப்பேரெயில் குறுந்தொகையுள் அமைந்துள்ள

"முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனின் தானோர் தலைமகன்
என்னை யாளு மிறையவ னெம்பிரான்
பின்னே யாரவர் பேரேயி லாளரே."

என்ற திருப்பாடலை எடுத்துக்காட்டி இதன் கண் வரும் முன்னையார் என்ற சொல் விநாயகரைக் குறிப்பித்ததென்கின்றனர். இரண்டாவது வரியில் 'தம்' எனப்பன்மை பேசாது 'தன்' என ஒருமை பேசியமை கொண்டே அங்கு முருகனைப்பற்றிய குறிப்பு மட்டுமேயுண்டு என்பது பெறப்படும். மேலும் 'முன்னையார்' என்பது நான்காம் வரியில் உள்ள பின்னையார் என்பதினொடு கருத்து வகையால் இணைந்து பேரெயில் இறைவன் முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாகவும் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்துமப் பெற்றியனாகவும் திகழும் பெருமான்

---

தன்னை முற்றும் இழந்த நிலையில்தான் அன்பு தோன்றக்கூடும்.

எனவே சுட்டி நின்றது எனக்கொள்வதே ஏற்புடைக் கருத்தாகும். இங்ஙனம் இயைத்தலே இணக்கமாவதை நுண்ணிதின் உணர்தல் கூடும்.

**விக்கின விநாயகர்:**

இனி, ஆறாந்திருமுறையில் அப்பரடிகள் திருப்புறம்பய இறைவனைப் போற்றிசைக்கும் அடியார் கூட்டத்துள் ஒருவராக விநாயகரை 'விக்கினவிநாயகன்' எனப் பொதுப்படக் குறித்தமையால் தம்மை வழிபடுவார்க்கு இடையூற்றைப் போக்குதலும் வழிபடாதவர்களுக்கு இடையூற்றையாக்குதலும் உடையன் என்ற கருத்துப் பெறப்படுதலை அறிய முடிகிறது. பிற்காலத்தில் பொருளையும் விளக்க முயல்வதை அறிய முடிகிறது.

**வேழ முகத்தவன்:**

திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்துள் கைவேழமுகத்தவன் துதிக்கையொடு கூடிய திருமுகத்தினன் என விநாயகர் வடிவுரைத்த செய்தியையும் கயமுகாசுரனை விநாயகரைப் படைத்து அழிப்பித்த செய்தியையும் முன்னரே விளங்கக் கண்டோம்.

இனித் திருவேகம்பத் தாண்டகத்துள் தண்கடமா முகத்தினார்க்குத் தாதை காண் எனக்குறிப்பித்துச் செல்லும் அப்பரடிகள் மதநீரொழுகும் விநாயகர் திருமுகச் செவ்வியுரைத்து அவர் சிவபெருமான் மகனார் என்ற கருத்தை நினைப்பித்துச் செல்வதைக் காணமுடிகிறது.

**எங்கும் விநாயகர்:**

இறுதியாக வாய்மூரடிகளைத் தாம்கண்ட அனுபவம் உரைக்க வந்த அடிகள் 'மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்'

---

தாயின் இதயம் குழந்தையின் பள்ளிக்கூடம் ஆகும்.

என உமையோடு விநாயகரின் ஒருங்கிணைந்த காட்சியைச் சுட்டி உமைமைந்தனாக அவரை உணர்த்துகின்றார். இங்ஙனமாக விநாயகர் பற்றிய பல்வேறு குறிப்புக்களை அப்பர் தேவாரத்தில் காணமுடிகிறது. இத்தகு கருத்துக்களை ஒன்றுபடுத்தி நோக்குதல் பல சமய உண்மைகளை நெறிநின்று காணுதற்குப் பயன்படுதல் கூடும். விநாயகர் பற்றிய அடிப்படைக் குறிப்புக்களை அப்பரடிகள் முதன் முதல் வழங்க இன்றோ விநாயகர் பற்றிய குறிப்பில்லாத சைவ சமய இலக்கியங்களே இல்லை என்ற நிலைமைக்கு வளர்ந்து விட்டிருப்பதைக் காணமுடிகிறது.

நன்றி: ஞானசம்பந்தம் 10-2-1971

---

**ஆத்மஜோதி சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு வருடந்தோறும் நிரந்தர நிதி உதவி வழங்குவோர்**

| | |
|---|---|
| திரு. வடிவேலு உமாகாந்தன் | $ 200.00 |
| திருமதி இராசமலர் சின்னராஜா | $ 200.00 |
| திரு. வடிவேலு ஞானகாந்தன் | $ 200.00 |
| திருமதி ஸ்ரீரங்கநாயகி சபாரத்தினம் | $ 200.00 |
| திரு. ம. வரதகுமார் | $ 600.00 |
| திருமதி தங்கமுத்து தம்பித்துரை | $ 200.00 |
| அமரர் சரவணமுத்து ஞானசம்பந்தர் நினைவாக | $ 200.00 |
| அமரர் கந்தையா செல்லப்பா நினைவாக | $ 200.00 |
| திரு. இ. முருகேசு | $ 200.00 |
| திரு V. N. சோமசுந்தரம் | $ 400.00 |
| அமரர் சின்னத்தம்பி செந்திவடிவேல் நினைவாக | $ 200.00 |
| ஈ. மகேந்திரநாதன் | $ 200.00 |

---

அன்புதான் உன் பலயீனம் என்றால் இந்த உலகில் மிகச்சிறந்த பலசாலி நீதான்.

இயற்கையில் இறைமையைப் பார்ப்பவன் பக்தன்.

# வேலுண்டு வினையில்லை

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
ஓய்வுநிலை உதவிப்பணிப்பாளர்
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்

## 1. தமிழில் முருகனைப் பாடிய அருளாளர்கள்

தமிழர் தெய்வமாகிய முருகப்பெருமானுக்கு தமிழர்கள் தாம் வாழும் இடமெல்லாம் கோயில்கள் அமைத்து வழிபட்டுவந்தார்கள். உயர்ந்து காணப்படும் மலைக்கு உயர்ந்து விளங்கும் முருகனையோ தெய்வமாகச் "சேயோன்மேய மைவரை உலகம்" எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. முத்தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரம் முருகனுக்குத் தமிழ்நாட்டில் கோயில் இருந்ததை "அறுமுகச்செவ்வேள் அணிதிகழ் கோயில்" எனக் கூறுகின்றது. புறநானூற்றில் முருகனைத் "திருத்தகு சேய்" எனப் புலவர்கள் போற்றினார்கள். முருகனைப் பல்வேறு தமிழிலே தமிழகத்து அடியார்கள் பலரும் பாடிப் பரவினார்கள். சங்கத் தமிழில் முருகனைப் பாடினார் நக்கீரர். புராணத் தமிழில் முருகனைப் பாடினார் கச்சியப்பர். பிள்ளைத் தமிழில் முருகனைப் பாடினார் பகழிக்கூத்தர். சந்தத் தமிழிலே முருகனைப் பாடினார் அருணகிரியார். நக்கீரர் அருளிய சிறந்த பக்திப் பிரபந்தமாகிய திருமுருகாற்றுப்படை திருமுறை வரிசையில் தொகுக்கப் பட்டுள்ளது. கலித்தொகை, அக நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் எல்லாம் முருகனின் பெருமை பேசப்பட்டுள்ளது. சோழருடைய ஆட்சிக் காலத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் வடமொழியில் உள்ள ஸ்கந்த புராணத்தின் சூதசங்கிதையில் வரும் சிவ ரகசியக் காண்டத்துச் செய்யுள்களைக் கந்தபுராணமாக அருளியுள்ளார். வாழ்வியல் நெறிகள் பலவற்றைக் கூறும் நூலாகவும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் கருவூலமாகவும் கந்தபுராணம் திகழ்கிறது. முருகப்பெருமானிடம் நேரடியாக உபதேசம் பெற்ற அருளாளர்களில் ஒருவராகிய

---

அமைதி குறையக் குறைய துன்பமும் வளரும்.

அருணகிரிநாதர் திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, மயில்விருத்தம், வேல்விருத்தம், சேவல்விருத்தம் ஆகிய பாடல்களை முருகப்பெருமான்மீது பாடியுள்ளார். குமர குருபரர், தேவராஜ சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகியோரும் முருகன் அருள் பெற்றுயர்ந்த அடியார்களே ஆவார்கள்.

## 2. வேலின் சிறப்பு

வீரவேல் முருகனுக்குரியது வில் இராமனுக்குரியது அறந்திறம்பிய அவுணரை அழித்தது வீரவேல் இரக்கமற்ற அரக்கர்களை அழித்தது இராமனின் வில். ஆதலால் **'வேலுண்டு வினையில்லை வில்லுண்டு பயமில்லை'** என்ற பழமொழி தோற்றம்பெற்றது. அனைத்தையும் வெல்லும் தன்மை உடையது வேல் ஆகும். அதனால் முருக பக்தர்கள் முருகப்பெருமானின் கையில் இருக்கும் ஞானசக்தியாகிய வேலை வெற்றிவேல் என்றனர். வெற்றியை விரும்பும் ஒவ்வொருவரும் **'வெற்றிவேலுற்ற துணை', 'வேலும் மயிலும் துணை'** என்று எழுதிவிட்டே தாங்கள் எழுதும் விடயங்களை ஆரம்பிப்பார்கள். வேற்படையை எண்ணி ஒரு கருமத்தைத் தொடங்கினால் அது மட்டின்றி இனிதே முடிவு பெறும்.

வெல் என்ற பகுதி வேல் என்று நீண்டது. வெல்வது வேல். வேல் எல்லாவற்றையும் வெல்ல வல்லது. முருகப் பெருமான் வேலின் உருவத்திலே ஞானத்தை வைத்திருக்கின்றான். அறியாமையை அகற்றும் ஞானம் வேலின் உருவமாக முருகப்பெருமானின் திருக்கரத்திலே விளங்குகின்றது. உலகத்துக்குத் துன்பம் தருகின்ற அகங்கார மமகார வடிவமாக விளங்கும் அசுர கூட்டங்களை வேல் வென்று அறவே ஒளிக்கும்.

திருவருள் சக்தி வடிவான வேல் முருகனின் திருக்கரத்தில் ஒளிர்கின்றது. அது தங்கவேல், மாணிக்கவேல், மரகதவேல்,

குழந்தைவேல், சிங்கார வேல், இரத்தினவேல், வெற்றிவேல், சண்முகவேல், கதிர்வேல், முத்துவேல், அருள்வேல், முருகவேல், சுந்தரவேல், இராஜவேல், வீரவேல் என்றெல்லாம் போற்றப் படுகிறது. வேல்வகுப்பு, வேல் விருத்தம், வேல் அலங்காரம் முதலிய நூல்கள் வேலின் பெருமையை எடுத்துக் கூறுகின்றன. முருகவேளுக்குரிய அஸ்திர தேவர் வேலாயுதமேயாகும். வேலாயுதத்தை 'உடம்படித் தெய்வம்' என்று கந்த புராணம் போற்றும். எண்ணரும் படைகட்கெல்லாம் இறைவனாக விளங்குகிறது வேலாயுதம்.

முருகனுக்கு திருமுகம் ஆறு இருப்பது போல வேலுக்கும் ஆறு பட்டை உண்டு. வேல் சோதியின் சோதியாக விளங்குகிறது. வேல் ஞான சக்தியின் வடிவம். முருகன் இன்றி வேல் இல்லை. வேல் இன்றி முருகன் இல்லை. அது அவனது சக்தி. மல இருளைக் கெடுத்து ஞான ஒளியைக் கொடுத்து அருள்சுரப்பது வேல். வேல் இன்றி வேறு துணை நமக்கு இல்லை. முருகப்பெருமான் எழுந்தருளும்போது மயில் பெருமைபெறுகிறது. வெற்றிவாகை சூடும்போது சேவற்கொடி சிறப்படைகிறது. வேல் ஞான பண்டிதனாம் முருகன் கையில் எப்போதும் இலங்கி அடியார்களுக்கு அருள் ஞானத்தை வாரி வழங்குகின்றது.

வேல் அடியார்களை அணுகி அறக்கருணை தந்து காக்கும். ஏனையோர்களை அணுகி மறக்கருணை தந்து அவர்களுக்கு வாழ்வு அளிக்கும். அடியவர்களை அணைத்துக் காக்கும் ஏனையோரை அடித்துக் காக்கும். மாயையை அகற்றி மல இருளைக் கெடுக்கும். வேற்படை திருவருட்சக்தி வடிவமானது. 'சக்தி தன் வடிவே என்னில் தடையிலா ஞானமாகும்' என்று சிவஞான சித்தியாரும் இதனைக் குறிப்பிடுகின்றது. முருகனிடத்தில் மூன்று சக்திகள் உள்ளன.

1. இச்சா சக்தி - விழைவாற்றல் - வள்ளி
2. கிரியா சக்தி - செயலாற்றல் - தேவயானை
3. ஞானா சக்தி - அறிவாற்றல் - வேல்

---

தன்னைத் தான் அடக்கியவன் தன் விரோதியை அடக்குவான்.

முருகனிடம் அமைந்த மூன்றாவது சக்தியாகிய ஞான சக்தியாகிய வேலாயுதம் விளங்குகிறது. எல்லாவற்றையும் வெல்லும் தன்மை அறிவாற்றலுக்கே உண்டு. ஒரே நெட்டிலாக மேலெழுந்து இரு அலகுகளாக விரிவுகொண்டு பின்பு படிப்படியாக ஒடுங்கி ஒரே முனையாக முடிவு பெறுவதே வேலின் அமைப்பாகும். ஒரே முனையாக ஒடுங்காவிடின் அது வேலாகாது. அறிவு ஆழமும், அகலமும், கூர்மையும் உடையது. வேலின் அமைப்பும் இதே போன்று காணப்படுகிறது. 'ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே' என்று மணிவாசகரின் தெய்வ வாசகமாகிய திருவாசகமும் போற்றுகிறது.

வேலின் பெருமையைக் கூறவந்த அருணகிரிநாத சுவாமிகள் அதனை மூன்று பொருள்களுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

1. பஞ்சாட்சரத்துக்கு நிகராகும்- திருப்புகழ் 606
2. மறச்சிறுமி வள்ளியின் விழிக்கு நிகராகும்-வேல்வகுப்பு
3. இறை கழற்கு நிகராகும் - வேல்வகுப்பு

### 3. தமிழ் இலக்கியங்களில் வேல் பற்றிய குறிப்புக்கள்

மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த தமிழர்கள் மர நிழலிலும் , குகையிலும் நெடுவேலை நட்டு அதையே வணங்கினர். வேலை வேலன் என்றே கூறி மகிழ்ந்தனர். பழங்காலத்தில் காவிரிப் பூம்பட்டினத்திலே முருகப்பெருமானுக்கு திருக்கோயில் இருந்தது. அங்கே வேலை நட்டு அதனையே ஏற்றிப் பூசை செய்து வந்தார்கள். இதனை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலே வேற்கோட்டம் என்று குறிப்பிடுகின்றார்.

கண்ணகியை குலதெய்வமாகக் கருதிக் குரவைக்கூத்து நிகழ்த்திய வேடுவர்கள் 'சூர்மா தடித்த கடரிலைய வெள்வேலே, மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே, குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே' என வேலினைப் போற்றி வழிபட்டார்கள்.

---

இறைவனின் நாமத்தை ஜெபிக்க ஜெபிக்க பக்தி மேலோங்கும்.

முருகனது வேலினைச் 'சுடரிலை நெடுவேல்' என அகநானூறு கூறுகின்றது. குறுந்தொகை கடவுள் வாழ்த்தில் 'அஞ்சுடர் நெடுவேல்' என வேல் சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் 'செவ்வேள்' என முருகனது வேலினைப் போற்றுகின்றார். பரிபாடல் வேற் படையினைச் சுடர்ப்பட வேல் எஃகு ஏந்திலை எனப் பல பெயர்களில் குறிப்பிடுகிறது.

மக்கள் தம் சொல்லினை உறுதிப்படுத்துவதற்காக முருகனின் வேலின்மீது ஆணையிடுவது பண்டைக் காலம் தொடக்கம் வழக்காக இருந்திருக்கின்றது. வேலின்மீது ஒருவன் பொய்ச் சூள் உரைப்பானாயின் அவனை வேல் துன்புறுத்தும் என மக்கள் நம்பினர்.

**'என்னையருளி யருன் மருக சூள் சூழின் நின்னையருளி வணங்கான் மெய் வேறின்னும்'** என நல்லுந்தவனார் தனது பாடலில் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் முருகனின் வேல் புகழப்படுகின்றது. கண்ணகியின் உறுப்புக்களை கோகுலன் வாயிலாகப் புகழ்ந்து கூறிய இளங்கோ அடிகள் அவளது கண்கள் பார்ப்போரைத் துன்புறுத்தும் தன்மை உடையது என உணர்த்தும்போது முருகன் தன் கை வேலினையே கண்களாகக் கொடுத்தான் என்பதனை

அறுமுக ஒருவனோர் பெறுமுறையின்றியும்
இறுமுறை காணும் இயல்பினை அன்றே
அஞ்சுடர் நெடுவேலொன்று நின்முகத்துச்
செங்கடை மழைக்கன் இரண்டாவித்தது

என்னும் அடிகள் மூலம் புலப்படுத்தியுள்ளார்.

கலித்தொகையில் முருகன் 'வெள்வோன்' எனவும் வேல் வல்லான் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளான். தோடங்கமருள் நின்றிலங்கு வேல் புகழப்படுகிறது. 'அஞ்சுவரு நெடுவேல்' எனப் பெருங்கதை வேலினைச் சிறப்பிக்கின்றது.

---

இறைவன் ஒருபணியை செய்ய அருளாளரை உருவாக்குகிறார்.

'வேற்குமரன்' எனவும் 'சூரிலங்கு வேற்குமரன்' எனவும் அப்பர் சுவாமிகள் வேற்படையைப் போற்றியுள்ளார். 'அங்கை வேலான்' எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முருகனின் கையில் விளங்கும் வேலினைப் பாடியுள்ளார். வட நாட்டிலே வேலின் பெயரே கேட்கப்படவில்லை அது தமிழ் நாட்டிற்கே சிறப்பாக உரியது என்று ஜி.சுப்பிரமணிய பிள்ளை என்ற ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்.

முருகன் கைவேல் கிரௌஞ்ச மலையைப் பொடி பொடி ஆக்கியது. சூரனுடனும் ஏனைய அசுரர்களுடனும் பெரும் போர் செய்து வெற்றி வாகை சூடியது. சூரன் தேவர்களுக்குச் செய்த இடர்களை எல்லாம் களைந்து அவர்களுக்கு வாழ்வு அளித்தது. நக்கீரர் முதலான ஆயிரம் அடியார்களின் சிறை வாழ்வை நீக்கிப் பெருவாழ்வு கொடுத்தது. கந்தவேட் பெருமானின் கையில் இருக்கும் வீரவேல் என்றும் பக்தர்களால் பாதுகாக்கும் கவசமாகவே திகழ்கிறது.

'குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர் இடர் தீர்த்ததுவும் – இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய் விடா வீரன் கைவேல்'

- நக்கீரர்

தொடரும்.

---

## 2016 தை மாதத்திற்குப்பின் ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

| | |
|---|---|
| வே. சிவபாலன் நினைவாக (2016, 2017) | $200.00 |
| க. சண்முகம் இளைப்பாறிய அதிபர் நினைவாக | $200.00 |
| இராஜநாதன் கணேஸ் நினைவாக (2016) | $310.00 |
| ஸ்ரீ முருகன் குடும்பம் (2016) | $250.00 |
| செல்வி கமலா சிங்கநாயகம் (2016) | $200.00 |
| பேரறிஞர் முருகவே பரமநாதன் நினைவாக (2016) | $100.00 |
| திருமதி. இரத்தினம் இராசேஸ்வரி நினைவாக(2016) | $200.00 |
| செல்வி. நளினி சரவணமுத்து நினைவாக(2017) | $200.00 |
| திரு சிவமுத்துலிங்கத்தின் பிறந்தநாள் நிதி (2016) | $450.00 |
| திரு சிவமுத்துலிங்கத்தின் பிறந்தநாள் நிதி (2017) | $1050.00 |
| சு. சிவபரமானந்தம் நினைவாக (2017) | $300.00 |
| க. கனகரத்தினம் நினைவாக (2018) | $150.00 |

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி - பாகம் 16

சு. சிவதாஸ்
(முன்னாள் ஆசிரியர், யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி)

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி அரிய பல தோத்திரங்களைத் தமிழில் அருளிச்செய்ததோடு நின்றுவிடவில்லை. சில அரிய பெரிய வடமொழி நூல்களை தமிழ் வடிவில்த் தந்தார். உதாரணமாக ஸ்ரீ சங்கராச்சாரியார் அருளிய ஸ்ரீ தட்சணாமூர்த்தி ஸ்தோத்திரம், சைவ உபாகமத்தில் ஒன்றாகிய தேவிகாலோத்தரத்தின் ஞான விசாரப் படலம் என்பவற்றை உதாரணமாகக் கூறலாம். இன்றைய கட்டுரையில் தேவிகாலோத்திரம் பற்றி நாம் சற்றுப் பார்க்கலாம். இந்த தேவிகாலோத்திர ஞானவிசாரப் படலம் 85 சுலோகங்கள் கொண்டது. சுலோகத்திற்கொரு வெண்பாவாக தமிழில் மொழி பெயர்த்து ரமண பகவான் அருளியுள்ளார். முதல் இரு வெண்பாக்களில் முதலாவது நூற்சிறப்பு பற்றிக் கூற, இரண்டாவது விநாயகருக்கு காப்பு கூறுகிறது.

நூற்சிறப்பு

"பிறவிகளிற் சிறந்தது மானுடப்பிறவி,நோன்புகளில் சிறந்தது கொல்லாமை,தெய்வங்களில் சிறந்தது கண்ணுதற் கடவுளாகிய சிவபெருமான், தெரிந்து அறிய வேண்டிய நூல்களில் சிறந்தது காலோத்திரமே".

**காப்பு**

"பரமசிவன் தன் திருவாக்கால் பார்வதி தேவியின் செவிகளில் புகட்டியருளிய இந்த தேவிகாலோத்தரமென்ற ஞான மார்க்கத்தில் நடந்து அதில் தேர்ந்தவர்களின் மகத்தான விளைவால் பிரகாசிக்கும் ஆனந்தமய அமிர்தமான அருள் நிறைந்த அத்துவித மௌனமாகிய, சர்வ சாட்சி ரூபமான யானைமுகனைத் தியானிப்போம்".

---

எல்லாம் கடவுள் செயல் என்று அறிந்தால்
துன்பமும் இல்லை கவலையும் இல்லை.

வெண்பா 1: **ஸ்ரீ பார்வதிதேவி பரமேஸ்வரனுக்கு உரைத்தல்**

"பரமேஸ்வரா! சகல உயிர்களும் எதனை அறிந்தால் முத்தியை அடைவதற்கான வழியை காணலாகுமோ அத்தகைய ஞானத்தையும் ஆசாரத்தையும் அறிய விருப்பமுள்ள எனக்கு அவற்றைக் கருணைகூர்ந்து சொல்லியருள்வீராக".

வெண்பா 2:

அதற்கு ஞான சொரூபமான பரமேஸ்வரன் "மாதர்களுக்கு அரசியே எந்தச் சாதனையை அனுட்டிப்பதனால், விவேகிகள், யாதொரு குற்றமற்ற சொல்லுதற்கரிய முத்தியடைவார்களோ, அத்தகைய ஞான மார்க்கத்தையும், ஆசாரங்களையும், அனைவரும் ஞானமடையும் பொருட்டு, நான் உனக்கு இன்று நன்றாகச் சொல்லுகிறேன், கேட்பாயாக" என்று அருளினார்.

இந்த உபதேசத்தை உட்கொள்பவனுக்கு என்ன தகுதி இருக்க வேண்டுமென்று 5வது வெண்பாவில் கூறுகிறார்.

வெண்பா 5:

"நான் என்ற அகங்காரமும் 'எனது' என்கின்ற மமகாரமும் அற்று ஜீவகாருண்யம் நிறைந்து, எல்லா உயிர்களுக்கும் அபயம் தந்து, முக்தியில் தீவிர இச்சை உள்ளவனாய் யோகத்தில் மனம் ஒன்றியவனாய், இத்தேவிகாலோத்தர மார்க்கம் ஒன்றிலேயே மனம் இசைந்து நிற்பானாக".

இவ்வாறு ஆயத்தமாக இருக்கும் ஒருவன் மனதை வெளிபோக விடாது, வலிந்து இழுத்துக் கட்டுப்படுத்தி சலனமற்ற நிலையில் வைக்கவேண்டும். எதனால் மனம் ஸ்திரமாக நிலைநிறுத்தப்படுமோ அதுவே முக்தி அடைவதற்கான வழி என்று 8ம் வெண்பாவில்

---

சொன்ன சொல்லை காப்பாற்றுவதை உன் கடமையாகக் கொள்
நீ உயர்வடைவாய்.

கூறுகிறார் பரமசிவன். வெண்பா 10இல் மனம் சிறிதேனும் சலிக்குமேயானால் அதுவே சம்சாரமாகிறது. சலிக்காமல் நிற்குமானால் அதுவே முக்தியாகும். ஆதலால் விவேகி மனதை எப்போதும் பரவஸ்துவைப் பற்றி மேலான பிரக்ஞையினால் உறுதிப்படுத்தி ஸ்திரமாக்க வேண்டும் என்று கூறுகிறார், வெண்பா 11,12 இல் பரமேஸ்வரன் தொடர்ந்தும் கூறுகிறார்.

வெண்பா 11:

"ஒன்றாக ஒடுங்கின அந்த ஏகாந்தத்தில் அடைகின்ற சுகமே அழிவற்ற ஆனந்தமாகும். அங்கு எந்தக் கருமங்களும் இல்லை. அந்த பரவஸ்துவில் பரவித்யைக் கற்றுத்தேர்ந்த எவன் தான், அதில் தோய்ந்து ரமிக்காமல் இருப்பான் நீயே சொல்".

வெண்பா 12:

அன்னியமாகவுள்ள விஷயங்களை அறியக்கூடிய ஞானம் போய், எங்கும் வியாபகமாயுள்ள, உருவமற்றதான நிர்விஷய ஞானத்தை அடைந்த சிரேஸ்டனானவன், மோட்சத்தை அடைய விருப்பமில்லாது இருப்பினும், அந்தத் தீரன், அழிவற்றதான மோட்ச வீட்டை தவறாமல் தானாகவே அடைந்திடுவான்.

வெண்பா 14:

"அன்னியமாகத் தோன்றும் சகலமும் அற்று ஏக சொரூபமாய், ஞானப்பிரகாசமாத்திரமாய்,காணக்கூடிய காட்சிகள் அற்றதாய், நானென்னும் உணர்வாகிய ஒரே அம்சததுடன் கூடிய சூனிய நிலை எதுவோ அதுவே பரம்பொருளுடன் சேர்க்கக்கூடிய, உய்யக்கூடிய மோட்சத்தை தரக்கூடிய விதையாகச் சொல்லப்படுகிறது"

வேண்பா 14 இல் நானென்னும் உணர்வு என்று சொல்லப்படுவது,அழியாது அகத்தே இருக்கும் ஆன்மவுணர்வு

என்று நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆன்மா அழியாதது; ஆன்மாவை ஆதாரமாகக் கொண்டு தோன்றும் உலகமும் உடலும் நிலையற்றவை,ஆன்மா ஒன்றே சத்தியமானது, அதில் எண்ணங்கள் தோன்றாது என்பதால் சூனிய நிலையென்று சொன்னார். அந்த எண்ணமற்ற நிலையே மோட்சத்திற்கு விதையாக அமைகிறது என்றார். இந்த எண்ணமற்ற நிலையே இருப்புணர்வு என்று வெண்பா 15 இல் பரமேஸவரன் சொல்லுகிறார். கீழே பார்க்கவும்:

வெண்பா 15:

"இருப்புணர்வாய் நிற்க விரும்பாது, நேர்வழியாகிய காலோத்தர மார்க்கத்தை விட்டு, சக்கரங்கள்,நாடிகள், சக்கரங்களின் தாமரைகளில் வீற்றிருக்கும் தேவதைகள், அவற்றிற்கான மந்திர அட்சரங்கள்,சூரிய சந்திர அக்கினி மண்டலங்களின் பல வித மூர்த்தி பேதங்கள் இவற்றை ஒருநாளும் கொஞ்சமும் நினையாதே.

இதிலே யோக மார்க்கத்தில் பிரவேசிக்க வேண்டாமென்று பரமேஸவரன் அறிவுரை கூறுகிறார். தொடர்ந்து வெண்பா 16 இலும் இக்கருத்தை வலியுறுத்துகிறார்.

வெண்பா 16:

"பிரதான கவனத்தை நிறுத்தும் பல விதமான மந்திரங்கள், உயிரின் கவனத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் கும்பகம், தாரணை முதலானவைகள் அத்தனையும், அழிவற்ற முக்தியை அடைய விருப்பமுள்ளவர்கள் அனுட்டிக்கத்தேவையில்லை".

(தொடரும்)

---

இரக்கப்படுபவன் ஏமாந்து போகலாம் ஆனால் தாழ்ந்போவதில்லை. வெற்றி வந்தால் பணிவு அவசியம். தோல்வி ஏற்பட்டால் பொறுமை அவசியம்.

பலவீனமான மனங்களே சோம்பலிடம் தஞ்சம் அடைகின்றன.

# இந்து சமயப்பேரவை செய்திகள்

## திருவெம்பாவை வழிபாடு



23-12-2017சனிக்கிழமை திருவெம்பாவை ஆரம்பமாகியது. அதிகாலை 6 மணிக்கு திருப்பள்ளிஎழுச்சி ஓதலுக்கு பின்பு தீபஆராதனை நடைபெற்றது. தொடர்ந்து சிவபூசை நடைபெற்றது. திருவெம்பாவைப் பாடல்கள் திருக்கூட்டத்தினரால் படிக்கப்பெற்று சிவபெருமானுக்கு சமர்பிக்கப்பெற்றது. 10 நாட்களும் இதேபோல பூசை வழிபாடுகள் தினமும் நடைபெற்று திருவாசகம் முற்றோதப்பெற்றது. திருக்கூட்ட அடியார்கள் பயபக்தியுடன் பங்குபற்றினர்

10ஆம் நாள் ஆருர்த்திரா தரிசனத்தன்று ஆத்மஜோதி இல்லத்தில் உள்ள நடராசப்பெருமானுக்கு அபிசேக ஆராதனைகள் நடைபெற்றது. நடராசர் பத்து பாடல்கள் 10ம் அடியார்களினால் படிக்கப்பெற்றது. பல அற்புதக்காட்சிகளும் திருக்கூட்டத்தினருக்கு கிடைக்கப்பெற்றது. பல நூற்றுக்கணக்கான தரம் திருவாசகத்தை முற்றோதிய எமது திருக்கூட்டத்தினர் பய பக்தியுடன் ஓதிப் பயன் அடைந்தனர்.

## தாயுமானவர் பாடல்கள் முற்றோதல்



6-1-2018 சனிக்கிழமையும் 20-1-2018 சனிக்கிழமையும் தாயுமானவர் பாடல்கள் முற்றோதப்பெற்றன.வழமைபோல சிவபூசையும் அன்னதானமும் நடைபெற்றது. தத்துவச் செறிவும் கருத்துச்செறிவும் நிறைந்த தாயுமானவர் பாடல்களை எமது திருக்கூட்டத்தினர் ஓதிப் பயன்பெற்றனர்.

## தைப்பொங்கல் வழிபாடு

13-1-2018 ஞாயிற்றுக்கிழமை தைப்பொங்கல் வழிபாடு காலை தொடக்கம் மாலைவரை வெகுசிறப்பாக நடைபெற்றது.

பொங்கிப்படைத்து திருமுறைப்பாராயனத்துடன் கந்தரலங்காரம் கந்தரனுபுதி போன்ற பனுவல்களை பக்திசிரத்தையுடன் ஓதி நிறைவு செய்யப்பெற்றது. பூசை வழிபாடுகளும் சிறப்பாக நடைபெற்றது.




தைப்பூச வழிபாடு



30-1-2018 செவ்வாய்கிழமை மாலை 3 மணியளவில் ஆரம்பமாகியது. முருகப் பெருமானின் பாடல்களான கந்தரலங்காரம் கந்தரனுபுதி திருப்புகழ் சண்முககவசம் போன்ற பனுவல்களுடன் திருமுறைகளும் ஓதப்பெற்றன விசேட பூசை வழிபாடுகளும் நடத்தப்பெற்றன.

சித்தர் பாடல் முற்றோதல்



3-2-2018 சனிக்கிழமைஆரம்பிக்கப்பெற்ற சித்தர் பாடல்கள் முற்றோதல் 24-2-2018 சனிக்கிழமை நிறைவேறியது. படிக்க படிக்க இனிமை தரும் சித்தர் பாடல்கள் உயர்ந்த ஆத்மீகக்கருத்துக்களை உள்ளடக்கியதாகும். வழமைபோல சிவபூசையும் அன்னதானமும் இடம்பெற்றது.

மகாசிவராத்திரி வழிபாடு



மகாசிவராத்திரி வழிபாடு 13-2-2018 செவ்வாய்க்கிழமை ஆத்மஜோதி இல்லத்தில் மிகவும சிறப்பாக நடைபெற்றது. மாலை 6 மணி தொடக்கம் மறு நாள் காலை வரை திருவாசகம் முற்றோதல் நடைபெற்றது. 4 சாமமும் சிவநாம சங்கீர்த்தனத்துடன் சிவபூசை நடைபெற்றது. திருக்கூட்ட அடியார்கள் பக்தி சிரத்தையுடன் இரவு முழுவதும் நித்திரை முழித்துப் பங்குபற்றினர். மறுநாள் காலை 6 மணிக்கு பாறணைப் பூசையுடன் சிறப்பாக முடிவடைந்தது.

குடைச்சுவாமியின் குருபூசை



குடைச்சுவாமி என அழைக்கப்படும் கந்தையாச்சுவாமியின் குருபூசை 22-2-2018 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு திருவாசகம் முற்றோதலுடன் வெகுசிறப்பாக நடைபெற்றது. நண்பகல் சிவபூசையுடன் சுவாமிகளின் திருஉருவப்படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது. அன்னதானமும் இடம்பெற்றது.

சிவயோகசுவாமிகளின் மகாகுருபூசை



சுவாமிகளின் மகாகுருபூசையை முன்னிட்டு பேரவையின் திருக்கூட்டத்தினர் கடந்த 20 வருடகாலமாக சுவாமிகளால் இயற்றப்பட்ட நற்சிநதனை பாடல்களை முற்றோதுவது வழக்கம். காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய நற்சிந்தனை முற்றோதல் இரவு 10.30 மணிக்கு நிறைவெய்தியது. நண்பகல் சிவபூசையும் சுவாமிகளின் திருஉருவப்படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது. அன்னதானமும் இடம்பெற்றது. பல திருக்கூட்ட அடியார்களும ' சுவாமிகளின் பக்தர்களும் பகதியுடன் பங்குபற்றினர்.

பங்குனி உத்தரம்



30-3-2018 வெள்ளிக்கிழமை பங்குனி உத்திர வழிபாடு திருவாசகம் முற்றோதலுடன் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகியது. நண்பகல் சிவபூசையும் அன்னதானமும் இடம்பெற்றது.

---

தோல்விகளிடம் வழி கேட்டுத்தான் வெற்றியின் வாசற்படியை அடையமுடியும்.

கோபப்பட்டு வென்றுவிட்டாய் எனறால் உன் கோபம் பெரிதென்று அர்த்தமல்ல.

# வித்தகனார் விளையாடல்!

செஞ்சொற்கொண்டல்
வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ

'வித்தகன்' என்றசொல் 'சதுரப்பாடுடையான்' என்னும் பொருள் உடையது. இறைவனின் வித்தகம் யாரால்தான் அறிய முடியும்? ஆதலின் பரம்பொருளாகிய இறைவனை 'வித்தகன்' என்று கூறுதலே மிகவும் பொருத்தமாகும். திருவள்ளுவரும் இந்தச் சொல்லைக்குறிக்கின்றார். 'நத்தம் போற்கேடும் உளதாகும் சாக்காடும் வித்தகர்க்கே எளிது' என்பது வள்ளுவர் வாக்கு. இறைவனைப் பலசொற்களாற் கனிந்துருகிப் பாடுகின்ற இயல்புடைய மாணிக்கவாசகர் தில்லையில் ஆடும் பிரானை வித்தகனார் என்று கூறுகின்றார். அவ்விறைவன் திருவிளையாடலைத் தான் தில்லையில் கண்டதாக உரைக்கின்றார். இங்குதான் 'வித்தகனார் விளையாடல்' என்ற அற்புதமான தொடரைக் காண்கின்றோம்.

அவ்வாறு என்ன விளையாடலைத் தில்லைப்பிரான் தமக்குச் செய்தார் என்று அப்பெருமானாரே விளக்குகின்றார். தம்மைப் பித்தனாக ஆக்கிவிட்டது அவன் செய்த விளையாடல்: தம்முடைய சித்தமெனும் திண்ணிய கயிற்றால் தன் திருவடியோடு இணைத்துக் கட்டிவிட்டானாம் அவ்வித்தகன்: இவற்றையே விளையாடல் என்று மணிமொழி குறிக்கின்றது. இந்த விளையாடலைத்தவிர மற்றொரு விளையாடலும் இறைவன் செய்கின்றான். அஃது எல்லாவுலகங்களையும் பற்றிய விளையாடல்: இதுவோ தனியொருவராகிய மணிவாசகர் பற்றிய விளையாடல்.

உலகங்களையெல்லாம் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடுகின்றான் அவன். இவையனைத்தையும் விளையாட்டாகச் செய்கின்றான் அந்த வித்தகன்.

---

சுயநலமே துன்பத்திற்கு காரணம்.

"காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி"

மாணிக்கவாசகர்க்குப்பின் பல நூற்றாண்டுகள் கழித்து வாழ்ந்து இராமகாதை பாடிய கம்பநாடர் இவ்விளையாடல் பற்றிய திருவாசகச் சிந்தனையில் ஈடுபட்டார் என்று தோன்றுகின்றது.

உலகங்கள் யாவற்றையும் படைத்தலும், படைத்தவற்றை நிலைபெற வைத்தலும், பின்பு நீக்குதலும் ஆகியவற்றைச் செய்யும் தலைவர் என்கின்றார். இச்செயலை "அலகிலா விளையாட்டு" என்ற சொல்லாற் குறித்து மகிழ்கின்றார். எண்ணிக்கையற்ற பெருமையுடையது என்று சிறப்பித்தும் களிக்கின்றார்.

இறைவனது திருவிளையாடலுக்கு அளவில்லை: அவற்றுள் அறுபத்து நான்கினை எடுத்து விளக்குவதே திருவிளையாடற் புராணம் ஆகும். அவ்விளையாடலின் உட்பொருளை உணர்ந்து இன்புற்று அவனது அருள்நெறி தலைப்படுதலே உயிர்களின் கடமையாகும்.

உமையம்மைக்குக் கணவனாக உள்ள இவ்விறைவன் அவருக்கு மகனாகவும் விளைவன்: இதுமட்டுமோ? தகப்பனாகவும் விளங்குவன்: தமையனாகவும் தோன்றுவன்: என்கின்றார் மணிவாசகர் பிறிதோரிடத்தில். அவன் திருவிளையாடல் அனைத்தினும் இறும்பூது விளைப்பதன்றே இது! இதை அந்த வித்தகனை விட வேறு யார் செய்ய முடியும்?

உலகைப் படைத்த இறைவனது அளவிறந்த ஆற்றலைக் கருதி வியக்கும் மேலைநாட்டுக் கவிஞரும் பலர் உளர். இறப்பும் பாவமும் சூழ்ந்த இவ்வுலகையும் அதற்குமாறாக மேல் உலகையும் படைத்த இறைவன் திருவிளையாடலை ஜேம்ஸ் மாண்ட்கோமரி (James Montgomery – 1771 – 1884) பாடுவது பின்வருமாறு: If God hath made this world so fair, where Sin and death abound. How beautiful, beyond compare will paradise be found" (The earth is full of God's Good ness")

---

பண்புள்ள நண்பன் வாழ்க்கையில் கண்போனறவன்.

இறைவன் திருவிளையாடலை எண்ணி மகிழாத கவிஞர் எங்கும் இல்லை. வில்லியம்கௌப்பர் (William cowper 1731 – 1800) என்ற கவிஞர் வாக்கை எண்ணி மகிழ்க:

"God moves in a mysterious way
His wonders to perform;
He plants his footsteps in the sea
And rides upon the storm

[Light shining out of Darkness]

"மின்னிடைச் செந்துவர்வாய்க் கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்!
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்!
போற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே"

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாக உள்ள இயல்புடையவன். அதற்கு மாறாகப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாகவும் உள்ளான் என்றால் இதைவிட வேறு புதுமை உண்டோ? "வித்து இன்றியே விளைவு செய்ய" வேறு யாரால் இயலும்? "நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்விக்கும்" பெரியவன் அவன். கல்லைப் பிசைந்து கனியாக்கும் திறமும் உடையவன். "கூறும் நாவே முதலாகக் கூறும் கரணங்கள் அனைத்தும் அவன்: தெளியும்வகை, திகைப்பு, தீமை, நன்மை அனைத்தும் அவன்" ஆவான். "யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான் யாவர்க்கும் கீழாம்" நிலையிலுள்ளாரையும் ஆட்கொள்வான். பெரும்பேறாகிய தன்னையே தந்துவிடும் அன்புடையான் அவ்வள்ளல். சிந்தனையைத் தூயதாக்கி அங்கே மண்டிகிடக்கும் இருளை

---

இறைவனின் செயல்களில் குறையேதும் இருப்பதில்லை.

நீக்கித் துன்பத் தொடர்புகளை அறுத்து ஒளிவெள்ளம் கூட்டி அதனைப் பின்னர் தன் கோயிலாகவே ஆக்கிக்கொள்ளும் அங்கணாளன் அவன்.

ஏழைவந்தியின் பிட்டமுது செய்தருளித் தண்டாலே பாண்டியன் தன்னைப் பண்கொண்ட புண்பாடல் அவன் பெருமையில் ஒரு கூறு. "தன்பெருமை தானறியாத் தன்மையன் காண்" இருப்பவன் ஆவன். தன்னொரு கூறு பெண்ணுருத்தாங்கிய பெருமான். "தோலும்துகிலும், குழையும்தோடும், வெண்ணீறும் சாந்தும், கிளியும் சூலமும், வளையும் உடைய அர்த்த நாரீசுவரத் தொன்மைத் திருக்கோலம்" காட்டும் பிரான். இவ்வாறு அவன் புரியும் விளையாடல்கள் பல: எண்ணற்றவை என்பது மணிவாசகர் திருவாக்கு. இவ்வாறு அவன் விளையாடுவது அனைத்தும் அனைவரையும் தூய்மைப்படுத்தும் பொருட்டே.

உள்ளத்தால் தூயராதல் இறைவன் திருவுள்ளத்திற்கு உகந்ததாகும். "அகத்தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்பார் வள்ளுவரும். மனத்தூய்மை உடையவரே சமயநெறி நின்றும் ஆட்கொள்ளும் பொருட்டே என்பது மணிவாசகர் முடிவு அதனை,

**"ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்**
**உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்"**
**என்கிறார் அடிகள்.**

தில்லையிலே இவ்வற்புதப் பெருமானின் திருவிளையாடல் நம் பெருமானாரைக் களிப்பிக்கின்றது. அக்களிப்பு மீதூர அமுதக்கவி பாடும் சிறப்பை எண்ணி எண்ணி மகிழ்தல் தகும் அத்திருப்பாடல் பின்வருமாறு,

**"பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்**
**பித்தனிவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே**
**சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங்கட்டுவித்த**

---

நமது முன்னேற்றம் நாவடக்கத்தில் உள்ளது.

வித்தகனர் விளையாடல் விளங்குதில்லை
கண்டேனே"

சூரியார் அவர்களே கடவுளைக் காண்பார்கள் என்று கிறிஸ்த்தவர் மறையும் விளக்கின்றது.

"Blessed are the pure in heart
For they shall see God"

(Maththew V.8)

"மெய்ம்மையாம் உழவைச்செய்து" (4.76.2) "காயமே கோயிலாக" (4.76.4) முதலிய அப்பரடிகள் திருவாக்குகளும் இங்கு ஆழ்ந்து உணர்தற்குரியன.


முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில்
இருந்து நேரடியாக
புத்தகங்கள்,
பத்திரிகைகள் இறக்குமதி
செய்து விற்பனை
செய்கிறோம்

அதிவேக துரித
பணமாற்றுச் சேவை

GTA MALL, 5215 Finch Ave. E., Unit #123
TEL: 416-321-0285

# சிவத்தமிழ் வித்தகரின் அமுதமொழிகள்

1. சங்ககாலம் தொடக்கம் இன்றுவரை தமிழ்ச் சமுதாயத்தின் உயர்வுக்கு தடைக்கல்லாக அமைந்திருப்பது ஊழியற் கொள்கையாகும். வினைப்பயன் விதி என்ற சொற்களாலும் இக்கொள்கை குறிக்கப்படுகின்றது.
2. வினைக்கொள்கையில் இறைவனை இடையில் புகுத்தாமல் விளக்கம் கொடுத்து வந்தது சமணம். அக்கொள்கையில் இறைவன் பங்கு முக்கியமானது என விளக்கி இறைவன் மூலம் ஊழ்வினையை வெல்லுதல் எளிது எனக்கூறுகின்றது சைவக்கருவூலங்களாகிய சைவத்திருமுறைகள்.
3. இறைவனின் துணை இருப்பவர்களுக்கு கோள்களின் பகை ஒன்றும் செய்யாது.
4. இறையருள் தன்னைக் காக்கும் எனற நம்பிக்கையுடைய அடியவனுக்கு எல்லாம் நன்மையாகவே அமையும்.
5. தனிமனித வாழ்வுக்கு தொழில் தேவை.ஒவ்வொரு மனிதனும் உழைத்தே வாழவேண்டும்.
6. செய்யும் தொழிலில் அர்பணிப்புத்தேவை. செய்யும் தொழிலே தெய்வம் என்ற நினைப்புடன் செயலாற்றவேண்டும்.
7. பயன் கருதிச் செய்வது தொழில். பயன் கருதாமல் செய்வது தொண்டு.
8. இறைவனை வழிபடுவதற்கும் இறையருளைப் பெறுவதற்கும் புறத்தூய்மை அவசியம். ஆனால் புறத்தூய்மையிலும் பார்க்க அகத்தூய்மை அவசியம் என திருமுறைகள் வற்புறுத்து கின்றன.
9. ஞானம் பெற்றவனுக்கு ஐந்து புலன்களும் அணையா விளக்குகள்
10. நமது உள்ளத்தில் உறையும் உள்ளொளி தான் உயிர்கள் அனைத்திலும் உள்ள இறைமையை உணர்த்துகின்றது.
11. தூய்மையான உள்ளம் தான் இறைவன் வீற்றிருக்க விரும்பும் இடமாகும்.
12. செயல்களுக்கு சிந்தனைகளே காள் கோளாக அமைகினறன. சிந்தனைகளின் வெளிப்பாடு செயற்பாடாக மிளிர்கின்றன.

# கோணேஸ்வரம் இரண்டாக வளர்ந்த தெய்வீக வரலாறு

க. வேலாயுதம், தம்பலகாமம்

இலங்கையிலும் இந்தியாவிலும் பிரசித்தி வாய்ந்த இந்து ஆலயங்கள் பல உள்ளன. காசி, சிதம்பரம், திருப்பதி, மதுரை, இராமேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கதிர்காமம் போன்ற தலங்களைக் குறிப்பிடலாம். இவைகளில் திருக்கோணேஸ்வரத்தைத் தவிர்ந்த ஏனைய தலங்கள் தோன்றிய காலம் முதல் இன்றுவரை எவ்வித மாற்றமும் இன்றி ஒரே நிலையிலேயே உள்ளன. உதாரணமாக சிதம்பரம் தோன்றிய காலம்முதல் ஒன்றாகவே உள்ளது : இரண்டு சிதம்பரங்களாக வளர்ந்ததில்லை, ஆனால் குளக் கோட்ட னென்னும் தர்ம சீலனால் உருவாக்கப்பட்ட கோணேஸ்வரம் மேற் காட்டிய ஆலயங்களின் நிலைக்கு முற்றும் விலக்கான தெய்வீக முறையில் திருகோணமலையில் ஒரு கோணேஸ்வரமும் அடுத்துள்ள தம்பலகாமத்தில் ஒரு கோணேஸ்வரமுமாக இரண்டாக வளர்ந்து இரு ஆலயங்களிலும் நித்திய பூசைகள், அபிஷேகங்கள் ஆண்டு உற்சவ விழாக்கள் போன்ற வைபவங்கள் குறைவின்றிச் சிறப்பாக நடைபெற்று வருவது சைவ ஆலய உலகிலே எங்கும் என்றும் நடை பெற்றிராத தெய்வீக அற்புதங்களாகும்.

## குளக்கோட்டன் இயற்றிய அழியாத தர்மம்

பண்டைய மன்னர்கள் படைகொண்டு அண்டை நாடுகளைத் தாக்கி அந் நாடுகளை அடிமைப்படுத்தி பெரிய சாம்ராஜ்யங்களை நிறுவினர் எனச் சரித்திரவாயிலாக அறியமுடிகிறது. இம் மன்னர்களின் நோக்கிற்கு முற்றும் விலக்காக நாடுபிடித்தாளும் ஆசை ஒரு சிறிதும் இன்றி தெய்வப் பணி புரியும் மேலான குறிக்கோளுடன் குளக்கோட்டன் என்னும் சோழ இளவரசன் கடல் கடந்து ஈழம் வந்து கைலை மலையின் சிகரங்களில் ஒன்றெனக் கருதப்படும் தலப்பெருமை மிக்க திருகோணமலையில் கோணேஸ்வரர் ஆலயத்தை அமைத்தான். ஆலய நிர்வகிப்புக் கருதி அக்காலத்தில் இலங்கையில் செங்கோ லோச்சிய ஆடக சௌந்தரி என்னும் பெண்ணரசியுடன் மண ஒப்பந்தம் செய்து

வாழ்த்துவதால் வாய் புனிதமடைகிறது.

கொண்டு அவளிடம் இருந்த பூதப்படையின் துணை கொண்டு கந்தளாய் நீர்த்தேக்கத்தையும் தம்பலகாமத்தில் நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றையும் வகுத்தான். கோணேஸ்வராலயத்தில் தொழும் பாற்ற தென்னிந்தியாவில் உள்ள மருங்கூரிலும் மற்றும் இடங்களில் இருந்தும் ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழும்பாளர் குடும்பங்களை அழைத்து வந்து இங்கு குடியேற்றிய மன்னன் திருக் கோணமலையைத் தலை நகரமாகக் கொண்டு திருகோணமலை இராஜ்யம் என்ற பெயரில் ஒரு தார்மீக அரசை நிறுவி பாண்டிய இளவரசன் ஒருவனை அழைத்து வந்து பூபாலவன்னிபம் என்று சிறப்புப் பட்டம் ஈந்து திருகோணமலை இராஜ்யத்தின் அரசுக் கட்டில் ஏற்றினான் எனப் புராண வரலாறுகள் இயம்புகின்றன. இந்த இராஜ்யம் ஆளும் வசதி கருதி மூன்று பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது.

திருகோணமலையில் இருந்து வடக்கே பறையனாறு வரையுள்ள பிரதேசம் கட்டுக்குளப்பற்று என்றும் இப்பற்றில் உப்பு வெளி - சாம்பல் தீவு, நிலாவெளி, கும்புறுபுட்டி, குச்சவெளி, திரியாய், புல்மோடை, தென்னமரவடி போன்ற ஊர்கள் உள்ளன. இராஜ்யத்தின் மத்திய பகுதியான தம்பலகாமப் பற்றில் தம்பல காமம், கந்தளாய், கிண்ணியா, அக்கரை, ஆலங்கேணி, ஈச்சம்தீவு, உப்பாறு கங்கை போன்ற பல ஊர்கள் உள்ளன. கிழக்குப் பகுதியான கொட்டியாபுரப்பற்றில் மூதூர், சம்பூர், கூனித்தீவு, சேனையூர். தோப்பூர், மல்லிகைத்தீவு 2 பள்ளிக்குடியிருப்பு, கங்கு வேலி, கிளிவெட்டி, வெருகல் போன்ற பல ஊர்கள் உள்ளன. இப்பிரதேசங்கள் இன்றும் கட்டுக்குளப்பற்று, தம்பல காமப்பற்று, கொட்டியாபுரப்பற்று என்றே அழைக்கப்பட்டு வருகின்றன. தம்பல காமம் கோணேஸ்வரர் கோயிலில் தொழும் பாற்றி வயல் மானியம் பெறும் தொழும் பாளர்கள் இந்த மூன்று பற்றுக்களிலும் பரந்து வாழ்ந்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## மகான் ஒருவரின் தீர்க்கதரிசனம்

திருமலை இராஜ்யத்தை ஆட்சி புரிந்து வந்தவன்னிய அரசர் ஒருவர் தம் சபையில் கூடி இருந்த பிரமுகர்களைப்பார்த்து "அன் பர்களே எம் கோமானாகிய குளக்கோட்டு மகாராஜா கோணேஸ்

உன் குற்றங்களை பார்க்கப்பழகு உலகம் உன் வசமாகும்

வரத்தை அமைத்து அதன் நிர்வகிப்புக் கருதி திருக் குளத்தையும் வயல் வெளிகளையும் திருத்தி இந்த இராஜ்யத்தையும் நிறுவி என் போன்றோரை நடுத்தீர்க்கவும் பணித்துள்ளார். என்வரையில் அவர் இயற்றிய தர்மகாரியம் எவ்வித குறையும் இன்றி நடைபெற்று வந்துள்ளது. எதிர்காலத்தில் இந்த தெய்வீக ஆலயம் என்ன நிலையை அடையுமோ" என மொழிந்தார். அரசன் கூற்றைக் கேட்டதும் அச்சபையில் இருந்த மகான் ஒருவர் ஆலயத்தின் பிற்கால நிலையைப்பற்றி ஒரு வெண்பா மூலம் பின்வருமாறு கூறினார்.

**"முன்னே குளக் கோட்டன் மூட்டும் திருப்பணியைப்**
**பின்னே பறங்கி பிரிப்பர் - மன்னவை பின்**
**பொண்ணாத் தனையியற்ற வழித்தே வைத்து**
**எண்ணார் வருவேந்தர்கள்"**

இந்த ஆலயம் பிற்காலத்தில் பறங்கியர்களால் அழிக்கப்படும் இக்கோயிலைத் திரும்பக் கட்டக்கூடிய அரசர்கள் இலங்கையில் இருக்க மாட்டார்கள் என்பதே அந்தத் தீர்க்க தரிசியின் கருத்தா கும். கோணேஸ்வரம் பிற்காலத்தில் அன்னியர்களால் அழிந்து விடும் என்பதை அறிந்து சைவமக்கள் கலக்கமடைந்திருந்தனர்.

## கோயிலை அழிக்க பறங்கியர் முயற்சி

மேற்கு நாட்டில் உள்ள போர்த்துக்கேயர்கள் வர்த்தகம் செய்யும் நோக்கில் கிழக்கு நோக்கி வந்தனர். கிழக்கு நாடுகளில் அப்போது நிலவிய ஸ்திரமற்ற அரசியல் நிலையைக் கண்ட அவர்கள் நாடு பிடித்தாளும் ஆசை கொண்டனர். அவர்களின் ஆட்சியில் சிக்கிய நாடுகளில் தங்கள் மதத்தைப் பரப்பவும் அந்நாடுகளில் உள்ள புராதன ஆலயங்களை இடித்தழிக்கவும் முற்பட்டனர். துரதிர்ஷ்ட வசமாக குளக்கோட்டன் என்னும் தர்மசீலன் அரும்பாடு பட்டு அமைத்த கோணேஸ்வரம் இருக்கும் திருகோணமலை அவர்கள் கைகளில் சிக்கியது. அங்கு வானுற உயர்ந்து நிற்கும் கோணேஸ்வரர் ஆலயத்தைக் கண்டதும் அவர்கள் பெரும் மலைப்படைந்தனர். அது ஒரு ஆலயமாக

இருந்தது மட்டுமின்றி கிழக்குப் பகுதியில் சைவ சமயத்தின் கலங்கரை விளக்கமாக அருள் ஒளிவீசிக் கொண்டிருந்தது. இந்தக் கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கினாலன்றி ஈழத்தில் தங்கள் சமயத்தைப் பரப்புவதென்பது முடியாத காரியம் எனக் கண்டனர். எனவே கோணேஸ்வரத்தை இடித்தழிப்பதெனத் தீர்மானித்து நாளும் குறிப்பிட்டனர். கோயிலை இடித்தழிக்கும் பொறுப்பை கொனஸ் தந்தைன் டீசா என்னும் தளபதி ஏற்றுக் கொண் டான். தங்களின் வணக்கஸ்தலம் அன்னியர்களால் அழிபட இருப் பதை அறிந்து சைவ மக்கள் செய்வதறியாது கலங்கினர்.

## சைவப் பெரியார்களின் தீரமிக்க செயல்

போர்த்துக்கேயர்கள் கோணேஸ்வரத்தை அழிப்பதெனச் செய்த முடிவு இப்பகுதி சைவர்களைப் பெரும் கலக்கத்தில் ஆழ்த்தியது . கலையம்சம் மிக்க தெய்வ உருவங்கள் அவர்கள் கைகளில் சிக்கினால் அவைகளை அவர்கள் தங்கள் நாட்டுக்குக் கொண்டுபோய் விடுவார்கள் என்பதையும் சைவப் பெரியார்கள் அறிந்திருந்தனர். இடிபட இருக்கும் கோயில் பிரதேசத்துள் அன்னியர்களின் போர்ப்படைகள் வெற்றிக் களிப்பில் ஆரவாரித்துக் கொண்டிருந்ததால் கோயில் பிரதேசத்துள் சைவர்கள் போய் மீள்வது கஷ்டமாக இருந்தது. ஆயினும் சைவப் பெரியார்கள் என்ன செய்வது என்று பேசாமல் சும்மா இருந்து விட விரும்பவில்லை. கோயில் அழிவைத் தடுக்கத் தங்களால் முடியா விட்டாலும் தாங்கள் வழிபாடு செய்து வந்த கோண நாயகரின் திருவுருவத்தையாவது அன்னியர்களின் கைகளில் சிக்காமல் கோயில் அழிவுக்கு முன் பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் சென்று விடவேண்டும் என்று துணிந்தனர். அவர்கள் இக் காரியத்தில் தங்கள் உயிர், உடல் பொருள், மனைவி, மக்கள் அனைத்தையுமே இழக்கத்தயாரானார்கள். அவர்களின் குறிக்கோள் கோண நாயகரின் திருவுருவை பறங்கியர்களின் கைகளில் சிக்காமல் பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் சென்று விட வேண்டும் என்பதேயாகும். இந்தத் தீரமிக்க கோஷ்டியில் கோயிலில் காரியமாற்றிய முக்கியஸ்தர்களான இருபாக

முதன்மைக் குருக்கள்மார், தானத்தார், வரிப்பத்தார் போன்றவர்கள் இருந்தனர்.

இப்பெருமக்கள் தங்கள் உயிர்வாழ்க்கையைப் பற்றிச் சிறிதும் கவலைகொள்ளாது செய்த தீரச் செயலின் விளைவாகவே இப்பகுதியில் இருந்து அழிக்கப்பட இருந்த கோணேஸ்வர வழிபாடு அழியாது நிலைத்திருந்ததுடன் அழிந்த கோணேஸ்வரம் திருகோணமலையிலும் தம்பலகாமத்திலும் இரண்டு கோணேஸ்வரங்களாக வளர்ந்து அருள் ஒளி வீசக் காரணமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. இந்தத் தீரமிக்க சைவப்பெரியார்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஒரு நாள் இரவு இடிபட இருக்கும் ஆலயத்துள் புகுந்தனர். அவசரம் அவசரமாகத் தேடிக் கோணநாயகரின் மூலத்திருவுருவை எடுத்துக்கொண்டு கொடிய வனவிலங்குகள் உலாவும் காட்டுவழியே இரவில் தம்பலகாமத்தை நோக்கி விரைந்தனர். தம்பல காமத்துக்கு வந்த பின்பும் மனிதர்கள் நடமாடும் இடத்தில் வைத்து அந்த மூர்த்தியை வழிபட அஞ்சினர். எனவே விடிந்ததும் தம்பலகாமம் மேற்கு மலையை நோக்கி இருள் சூழ்ந்த வனத்தினூடே சென்றனர். தம்பலகாமத்தில் இருந்து சுமார் ஆறு அல்லது ஏழு மைல் தூரத்தில் பல மலை அடுக்குகளை உடையதும் பள்ளத்தாக்குகளும் வானுயர்ந்த மரங்களையும் மனித சஞ்சாரத்தை என்றும் அறியாத மலை வன த்தில் பேரோசையுடன் ஆர்ப்பரித்துப் பாய்ந்து வரும் உலமியனாற்றங்கரையில் உயர்ந்து நிற்கும் மலைச் சிகரத்தில் பீடமமைத்து தாங்கள் பெரும்பாடுபட்டுக் கொண்டு வந்த தெய்வீக மூர்த்தியின் திருஉருவை வைத்து வழிபட்டு வரலாயினர்.

இப்பெரியார்களின் தீரமிக்க செயலைக் கண்டு துணிச்சல் அடைந்த சைவப்பெரியார்களில் சிலர் இரண்டாவது தடவையாகவும் இடிபட இருக்கும் கோயிலுக்குள் புகுந்து மிச்சமாக உள்ள பிரதான விக்கிரகங்களை யெல்லாம் எடுத்து வந்து திருமலை வடதிசைக்கடலோரம் புதைத்து வைத்தனர். இம் மூர்த்திகளே கிணறு தோண்டும் போது. கண்டெடுக்கப்பட்டு புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ள திருகோணமலைக் கோணேஸ்வரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபட்டு வரும் கடவுளர்களின் திருவுருவங்களாகும்.

--வளரும்

---

நல்ல அறிவு உடையவனுக்கே பண்பு வாய்க்கிறது.



திருமுறை விழா 2017 இல் எடுக்கப்பட்ட படங்கள்

## ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்

✱ சாதனை இல்லாமல் சாத்தியம் இல்லை. சாதனை இல்லாமல் சமயமும இல்லை.சமயத்தை உணரவேண்டுமானால், கடவுளை உணர வேண்டுமானால் சாதனை மிக அவசியம்.

✱ எனக்கு பத்து பன்னிரனடு வயது இருக்கும் பொழுது சடைவரதசுவாமிகள் எங்கள் வீட்டுக்கு வந்தார். என் பெற்றோர்கள் அவரிடம் பாததரிசனம் எடுத்தனர்.என்னையும் வணங்கும்படி கூறினர்.நானும் வணங்கினேன். என்தலையைத் தொட்டு ஆசீர்வதித்த சுவாமிகள் சட்டம்பியாய் இருப்பாயடா உலகம் எல்லாம் சுற்றுவாயடா. ஒருகுறையும் இல்லாமல் வாழ்வாயடா என்று ஆசீர்வதித்தார்.

✱ சடைவரதர் பரம்பரையில வந்த இல்லற அடியார்கள் பலர் இன்றும் வாழுகிறார்கள். அந்த அடியார்கள் பரம்பரையில் வந்த குடும்பத்தினர் இன்றும் சீரும் சிறப்புமாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

✱ எமது உடம்பை தாங்குவதற்கு இருகால்கள் இருப்பதுபோல எமது வாழ்க்கையை தாங்குவதற்கும் இருகால்கள் தேவை. அவை நமபிக்கையும் முயற்சியும் ஆகும்.

✱ மகான்கள் யாவரும் தம்முடைய மனத்திற்கு தாமே புத்தி சொல்லியும் தமக்கு தாமே தண்டனை கொடுத்தும் தங்களை தாங்களே திருத்திக் கொண்டவர்கள். அவர்கள் தாமாகத் திருந்த உலகம் அவர்களைப்பார்த்து தாமாகத் திருந்திக்கொண்டது.

✱ ஒருவன் பிழை செய்யச்சந்தர்ப்பம் கிடைத்தாலும் பிழை செய்யாமல் இருக்கப் பழகிவிட்டானால் அவனுக்கு வேறு சாதனைகள் தேவையில்லை.

✱ பல மகான்கள் தவம் செய்த திருவண்ணாமலையை சுற்றி கிரிவலம் வருதலே சமய சாதனையாகும்.

* ரமணமகரிசி வாழ்ந்து சோதிமயமான பெருமை திருவண்ணாமலைக்கு உரியதாகும்.

* அண்ணாமலை என்ற சொல்லை யாரோ ஒருவர் சொல்லைக்கேட்டு துறவு பூண்ட பெருமை ரமணரையே சாரும்

* குருவினுடைய கிருபை இல்லாமல் மோட்சம் இல்லை என்பது எப்பவோ முடிந்த முடிவு. முத்தியை இறைவனால் கொடுக்க முடியாது. குரு ஒருவரால்தான் கொடுக்கமுடியும்.

* அஞ்ஞான இருளில் இருந்து ஞானஒளிக்கு வழிகாட்டுவது குருவின் தத்துவமாகும்.

* குரு ஒருவர் பூத உடலை விட்டு நீங்கினாலும் சூக்கும உடலில் இருந்து அருள் பாலித்துக்கொண்டு இருக்கிறார் என்பதற்கு பல அத்தாட்சிகள் உள்ளன.

* மகான்கள் வாழைக்காயை மீன் ஆக்குவார்கள். மீனை வாழைக்காயாக்குவார்கள் அது அவர்களின் இயல்பு.

* பல மகான்கள் தங்களை பைத்தியக்காரர்கள் போலக் காட்டிக்கொள்வது அவர்களின் இயல்பு.

* சாதுக்களை கடவுளின் பிரதிநிதிகள் எனக்கருதி சேவை செய்யவேண்டும். அப்படி செய்வதால் மன அமைதியும் சாந்தமும் பெறலாம்.

* சித்தானைக்குட்டி சுவாமிகளை என் முதல் தரிசனத்திலே அவர் ஒரு மகான் என்பதை உணர்ந்து கொண்டேன். அவர் முன்னிலையில் அவரை நினைத்துத் தியானித்துக் கொண்டிருந்தேன். மனதில் ஒரு அமைதி பிறந்தது. அந்த அமைதியில் கண்களை திறந்தேன் சுவாமிகளின் திருஉருவம் சோதிப்பிளம்பாகக் காட்சியளித்தது.

# கனகாம்பிகை

## தங்க நகைமாளிகை & நகை அடகுமாடம்

சகலஓடர்களும், திருத்த வேலைகளும் விசேட விலைச் சலுகையில் செய்து கொடுக்கப்படும்

சிங்கப்பூர் புதிய நகைகள் அனைத்தும் நகரில் வேறு எங்கும் பெறமுடியாத மலிவு விலையிலும், குறித்த நேரத்தில் உங்கள் எண்ணங்களுக்கு ஏற்றவாறு நகைகளை ஓடருக்குக்கும் பெற்றுக் கொள்ளலாம்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் அடைவுபிடிக்க நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் கூடிய
**கனகாம்பிகை**
**நகை அடைவு மாடம்**

அரச அங்கீகாரம் பெற்ற அடைவு நகைமாடம்

22 கரட் அகல் தங்க ஆபரணங்கள்
நவரத்தின மோதிரங்கள்
வைரக் கற்கள் (பவளம், முத்து)
பரிசுப் பொருட்கள்
மாணிக்கக் கற்கள்
தாலிக்கொடி காது குத்தல்



LUCKY STONES
FINEST QUALITY 22K
GOLD & DIAMOND
JEWELLERY



**KANAGAAMBIKAI GOLD HOUSE & PAWN BROKERS**

3160 Eglinton Ave. East, Unit 3
Scarborough, ON. M1J 2H3
TEL: 416-269-7197

2613 Eglinton Ave. East
Scarborough, ON. MK 2S2
TEL: 416-269-7198



idential / Commercial / Investment

**HomeLife/Miracle**
**Realty Ltd.** Brokerage
Independently Owned & Operated

Tel: 905-455-5100
Fax: 905-455-5110

இடம்பட விடு எடேல் - *"Build your house meeting your needs"*

**Jey Sellappah** B.Eng (civil), NCTech (civil), GDipJS
Member of OACETT
Sales Representative

**Dir: 647-618-0354**
**realtorj007@gmail.com**

MLS

# விவேகா அச்சகம்

**VIVEKA** *Printers*

**416 269 1994**